★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜுலை 18 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 167 | Monday 18, July, 2022 | 12பக்கங்கள் | 40/-

### இலங்கை குறித்து ஆராய்வதற்கு
## சர்வகட்சி கூட்டத்தை கூட்டுகிறது இந்தியா!



இலங்கையின் தற்போதைய நெருக்கடி தொடர்பில், ஆராய்வதற்கு இந்திய அரசாங்கம், அந்த நாட்டின் சர்வகட்சி கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது. 04

## உணவு நெருக்கடியை தவிர்ப்பதற்கு மேலும் அதிகமாக செயற்படல் அவசியம்

### உலக உணவுப்பாதுகாப்பு மாநாட்டில் பதில் ஜனாதிபதி சுட்டிக்காட்டு



உலக உணவு நெருக்கடி தொடர்பில் G7 கூட்டமைப்பு இலங்கைக்கு 14 மில்லியன் அமெரிக்க டொலர்களை உணவுக்காக செலவிட முன்வந்துள்ளதாக தெரிவித்த பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் உணவு நெருக்கடியை தவிர்ப்பதற்கு இன்னும் அதிகமாக செயற்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். உணவுப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாட்டின் போது உரையாற்றிய பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில், 04

### தனியார் பஸ்களுக்கு வரையறையின்றி டீசல்;
## இன்று முதல் பஸ் சேவை வழமைக்கு திரும்புகிறது

### கெமுனு விஜேரத்ன நேற்று தெரிவிப்பு



தனியார் பஸ்கள் இன்று (18) முதல் வழமை போல் சேவையில் ஈடுபடும். வரையறையற்ற வகையில் தனியார் பஸ்களுக்கு எரிபொருளை விநியோகிக்க தீர்மானித்துள்ளமை சிறந்ததாகும் என அகில இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் 04

### 40,000 மெ.தொன் டீசலுடன் கப்பல்;
## ஒரு வாரத்திற்குள் மேலும் 03 எரிபொருள் கப்பல்கள்

### வந்தடையும் என எரிசக்தி அமைச்சு உறுதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



40,000 மெற்றிக்தொன் டீசலுடன் கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்துள்ளதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் இன்று 40,000 மெற்றிக் தொன் டீசலுடன் 04

### ஜனாதிபதி தெரிவிற்கான வாக்களிப்பு தொடர்பில்
# எம்.பிமார் சிலருக்கு அழுத்தம் பிரயோகம்

## விசாரணை நடத்த பதில் ஜனாதிபதி அதிரடி உத்தரவு

**MPமாருக்குள்ள உரிமைக்கு இடையூறு விளைவித்து சமூக வலைத்தளங்கள் ஊடாக கடும் அழுத்தங்களை பிரயோகிக்கும் நபர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவும் பணிப்பு**

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நடைபெறவுள்ள தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக வாக்களிக்க இடையூறு செய்யும் வகையில் சமூக வலைத்தளங்கள் ஊடாக அழுத்தம் கொடுக்கும் நபர்கள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு தரப்பினருக்கு நேற்று (17) உத்தரவிட்டுள்ளார்.

சில வேட்பாளர்களுக்கு வாக்களித்துவிட்டு ஊருக்கு வரவேண்டாம் என்று குறிப்பிடும் பதிவுகள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டு வருகின்றன. இவை 04



ஆட்டோ,ஜெனரேட்டர்கள் மற்றும் நடமாடும் உணவு விநியோக மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்காக நடமாடும் எரிபொருள் விநியோக டிரக் வண்டிகளை பரீட்சார்த்தமாக பயன்படுத்த மின்சக்தி ,எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து தூர இடங்களில் அமைந்துள்ள பொது இடங்களில் இவ்வாறு நடமாடும் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## தமிழர் அபிலாஷைகளையும் உள்வாங்க மனோ வலியுறுத்து 03

குமார் குணரத்தினத்திடம் கோரிக்கை விடுப்பு

## இடைக்கால ஜனாதிபதி பதவி; ரணிலே பொருத்தமானவர்

### அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு



இடைக்கால ஜனாதிபதி பதவிக்கு, தற்போதைய பதில் ஜனாதிபதி பதவி வகிக்கும் ரணில் விக்ரமசிங்கவே பொருத்தமானவராக இருப்பார் என தாம் நம்புவதாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்வுக்கான போட்டியில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் அவரையே 04

### புதிய இடைக்கால ஜனாதிபதி தெரிவு;
## வேட்பாளர் பெயர்கள் அறிவித்ததும் தீர்மானம்

### TNAயின் முடிவு குறித்து சுமந்திரன் MP

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



புதிய இடைக்கால ஜனாதிபதிக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது இறுதி தீர்மானத்தினை அறிவிக்கும் என்று அதன் ஊடகப் 04

## ஜனாதிபதி தெரிவுக் களத்தில் JVP தலைவரும் குதித்தார்

### உத்தியோகபூர்வமாக அறிவித்தார் விஜித



நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு அனைவருடனும் இணைந்து பொது இணக்கப்பாட்டுடன் செயற்பட நாம் தயார் என்று பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் (16) சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், 04

### வேட்பாளராக பலர் நின்றால்
## SLFP வாக்களிப்பில் கலந்து கொள்ளமாட்டாது

### மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதி தெரிவுக்காக பலரும் போட்டியிடாமல் அனைவரும் ஒன்றிணைந்து ஒருவரை ஜனாதிபதியாக நியமிப்பதே பொருத்தமானதாகும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரி 04

## ரஞ்சனின் விடுதலைக்கான ஏற்பாடுகளை முன்வைக்கவும்

### நீதியமைச்சருக்கு பதில் ஜனாதிபதி பணிப்புரை



சிறைத் தண்டனை அனுபவிக்கும் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் பதில் ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கமைய பதில் ஜனாதிபதி நீதி அமைச்சருக்கு இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார். 04

## எரிபொருள் நாட்டுக்கு வந்தாலும் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம்

### அறிவித்தல் விடுத்ததும் வருமாறு மக்களிடம் கஞ்சன கோரிக்கை



எரிபொருள் கப்பல் நாட்டை வந்தடைந்தாலும், தேசிய எரிபொருள் அட்டை முறைமை நடைமுறைப்படுத்தப்படும் வரையில், இலங்கை கனியவள கூட்டுத்தாபன நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் 04

## தேசிய எரிபொருள் அனுமதி பத்திரத்தை பயன்படுத்தல்

### எவ்வாறு என்பது தொடர்பில் விளக்கம்

**இதுவரை 10 இலட்சம் பேர் பதிவு**




புதிய நடைமுறையின் கீழ் ,தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர நேற்று தெரிவித்தார். இதற்கான இணையதளம் http://fuelpass.gov.lk என்பதாகும்.

இந்த நடைமுறையின் கீழ் பதிவை மேற்கொண்ட பின்னர் ,சிபேட்கோ அல்லது லங்கா IOC எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் 04



ஜனாதிபதி தெரிவில் நடுநிலை வகிக்க முடிவு;
## கோரிக்கைகளை ஏற்றால் ஆதரவு குறித்து பரிசீலனை 03



பெற்றோருடன் குளிக்கச் செல்கையில்
## முதலை இழுத்துச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு 03

## கொரோனாவிலிருந்து குணமடைந்தார் முதல்வர் மு.கா ஸ்டாலின்

**(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)**



முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய தினம் மாலை மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்படுவார். மேலும் வீட்டில் ஒருவாரம் ஓய்வு எடுக்க வேண்டும் என்று காவேரி மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல்வர் 04

### போராட்டக்காரர் கைப்பற்றிய இரு
## துப்பாக்கிகளை தேடி பொலிஸார் வேட்டை

### கை ரேகைகள் பலவும் சேகரிப்பு



பாராளுமன்ற நுழைவு வாயிலுக்கு அருகில் அண்மையில் ஏற்பட்ட கடும் பதற்ற சூழ்நிலையின் போது பாதுகாப்பு படையினருக்கு சொந்தமான இரண்டு துப்பாக்கிகள் திருடப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 04


## ரணில் 140 வாக்குகள் பெறுவது நிச்சயம்

### வஜிர அபேவர்த்தன நம்பிக்கை



இடைக்கால ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பு ஜுலை 20 ம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாக்கெடுப்பில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுமார் 140 வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். 04

### அலட்சியம் காட்டினால் ஆபத்து;
## கொரோனா 04ஆவது டோஸ் மிக அவசியம்




கொவிட் 19க்கு எதிரான நான்காவது தடுப்பூசியின் எட்டு மில்லியன் டோஸ்கள் இன்னும் மூன்று வாரங்களில் காலாவதியாகிவிடும் என சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார.

இலங்கையின் சனத்தொகையில் மிகக் குறைந்த சத வீதத்தினரே 04

## காட்டு யானை தாக்கி மூன்று பேர் உயிரிழப்பு

### மூவரும் விவசாயிகள் என தெரிவிப்பு



பொலன்னறுவை திம்புலாகல, மெதிரிகிரிய நவநகர மற்றும் சாலியவெவ ஆகிய பகுதிகளில் வைத்து காட்டு யானை தாக்கி மூன்று விவசாயிகள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மெதிரிகிரிய நவநகரைச் சேர்ந்த சரத்சந்ர மூன்று பிள்ளைகளின் 04

# அமெரிக்காவில் குரங்கம்மை தடுப்பூசி தேவை அதிகரிப்பு



அமெரிக்காவில் குரங்கம்மை தடுப்பூசிக்கான தேவை அதிகரித்து வருகிறது. தேவையைச் சமாளிக்கப் போதுமான தடுப்புமருந்து இல்லை என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். அங்கு இதுவரை சுமார் 1,400 பேருக்குக் குரங்கம்மை ஏற்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று கூறப்படுகிறது. கடந்த வாரம் அமெரிக்க அரசாங்க இணையத்தளம் தடுப்பூசி கேட்டு வந்த ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களைச் சமாளிக்க முடியாமல் தடுமாறியது.

# விலையேற்றம்: பிரிட்டனில் ஆறில் ஒருவர் வறுமையில்



பிரிட்டனில் 6 பேரில் ஒருவர் வறுமையில் வாழ்வதாகப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. பெரும்பாலான குடும்பங்கள் உணவு வங்கிகளை நாடியுள்ளன. மேலும் சிலர் உணவுதானத்தை நம்பியுள்ளனர்.

உயரும் எரிபொருள் விலையால் வசதிகுறைந்த குடும்பங்கள் கூடுதல் நெருக்கடியை எதிர்நோக்குவதாக அண்மைய ஆய்வொன்று குறிப்பிட்டுள்ளது. அத்தகையோரை உணவு விலையேற்றம் பெரிதும் பாதித்துள்ளது. எரிபொருள் விலை உயர்வைச் சமாளிக்க ஒவ்வொரு குடும்பத்துக்கும் சுமார் 500 டொலர் வழங்க அந்நாட்டு அரசாங்கம் உறுதியளித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இருப்பினும் ஆண்டு அடிப்படையிலான எரிபொருள் கட்டணம் சுமார் 1,000 டொலர் உயரக்கூடும் என்பதால் அந்த நிதியுதவி போதுமானதாக இருக்காது என்ற கவலையும் நிலவுகிறது.

## கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 10 | | 12 |
| 08 | | 07 |
| 1929 | | 2022 |



**மரியம்பிள்ளை பிலோமின்**

அப்பா அன்புருவ அப்பா
ஆசீர் தாராமல் நீங்கினையே
உன்னை வெறுத்தேனில்லை
ஒன்றைக் கொடுத்தேனில்லை
காண கொடுத்தாலும் வைத்தேனில்லை

கண்போல எமைக்காத்து வளர்த்தாயப்பா
கார்போல வனம் ஈந்து வைத்தாயப்பா
விண்சேரும் இதழ் வந்து பறந்தாயேனோ

நீ மண்ணோடு மண்ணாக
மறைந்ததேனோ

- அன்பு மனைவி, பிள்ளைகள்

அன்னாரின் பூதவுடல் Shanti Funeral Services, 184, Pinner Road, Harrow, Midx HAI 4JP இல் இன்று திங்கட்கிழமை 6pm - 8pm வரை இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நல்லடக்க ஆராதனை st. George's RC Church, 970 Harrow Road. Wembley. HAO ZQE இல் நாளை 19ஆம் திகதி மு.ப 10.30இற்கு நடைபெற்று, பி.ப. 12.30 இற்கு Carpenders Park Lawn Cemetery, Oxhey Lane. Watford. WD19 SRL இல் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.




## சர்வதேச செய்திகள்

# ஆயுதங்களை ஏற்றிய விமானம் கிரேக்கத்தில் விழுந்து விபத்து



கண்ணிவெடிகள் உட்பட ஆயுதங்களை ஏற்றிய சரக்கு விமானம் ஒன்று வடக்கு கிரேக்கத்தில் விழுந்து நொறுங்கியுள்ளது. இந்த விபத்து இடம்பெற்ற பகுதிக்கு அருகில் வாழும் மக்களை வீடுகளில் தங்கியிருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

உக்ரைனைத் தளமாகக் கொண்ட அன்டோனோவ்–12 என்ற இந்த விமானம் செர்பியாவில் இருந்து ஜோர்தானை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது கடந்த சனிக்கிழமை கவலா நகருக்கு அருகில் விழுந்துள்ளது.

விமானத்தில் இருந்த எட்டுப் பணியாளர்களும் உயிரிழந்திருப்பதாக செர்பிய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த விமானத்தில் 12 தொன் சரக்குகள் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதோடு அவை அபாயகரமானவை என்று விபரிக்கப்பட்டுள்ளது.

ஆளில்லா விமானம் மூலம் விபத்து இடம்பெற்ற பகுதி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கண்காணிக்கப்பட்டுள்ளது. அங்கு பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை அந்தப் பகுதிக்கு செல்வதை இராணுவம், வெடிபொருள் நிபுணர்கள் மற்றும் கிரேக்க அணுசக்தி ஆணையம் தவிர்த்துள்ளதாக அந்நாட்டு அரச தொலைக்காட்சி குறிப்பிட்டுள்ளது.

விபத்து நடந்து சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக விமானம் கொழுந்து விட்டு எரிந்ததாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர்.

விபத்து நடந்த இடத்திலிருந்து கடும் துர்நாற்றம் வீசுவதால் அதிகாரிகள் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மக்கள் இரவு முழுவதும் சன்னல், கதவுகளை மூடியே வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் வீடுகளுக்குள் முகக்கவசம் அணிந்தவாறு இருக்குமாறும் கூறப்பட்டுள்ளது.

விமானம் புறப்பட்ட பின் எஞ்சினில் பிரச்சினை ஏற்பட்டதால் அதனை கவாலா விமானநிலையத்தில் தரையிறக்க விமானி கோரியபோதும் விமானத்தை ஓடுபாதையை நோக்கி எடுத்துச்செல்ல முடியாமல்போயுள்ளது.

விமான நிலையத்திற்கு 40 கி.மீ. தொலைவு முன்பே அந்த விமானம் விபத்தில் சிக்கியது என கிரேக்க நாட்டு விமான போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

இந்த விமான செர்பியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை பங்களாதேஷுக்கு எடுத்துச் சென்றுகொண்டிருந்ததாக செர்பிய பாதுகாப்பு அமைச்சர் நெபொஸா ஸ்டெபனோவின் தெரிவித்துள்ளார். அது டாக்காவுக்கு சென்றடையும் முன்னர் ஜோர்தான், சவூதி அரேபியா மற்றும் இந்தியாவில் நிறுத்தப்படவிருந்தது.

# பாக். விசேட பொலிஸ் அணி மீது கிராமத்தவர் தாக்குதல்

### இரு பொலிசார் படுகாயம்



பாகிஸ்தான் லாகூரைச் சேர்ந்த கோக்கார் கிராமத்தவர்கள் பாக். டொல்பின் படையணியின் இரண்டு பொலிஸ் வீரர்கள் மேல் நடத்திய தாக்குதலில் அவர்கள் படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இத்தகவலை வெளியிட்டிருக்கும் லாகூர் செய்தி, நிறுவனம் பயங்கரவாதியாகக் கருதி ஒரு உள்ளூர் இளைஞனை டொல்பின் படையணி சுட்டுக் கொன்றதையடுத்தே ஆத்திரமுற்ற உள்ளூர்வாசிகள் பொலிசார் மீது தாக்குதல் நடத்தியதாக மேலும் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த மாதம் இப்படையணி இறந்தவரின் சகோதரர்கள் மற்றும் மனைவியர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பெண்மணி மரணமடைந்ததோடு இரு சகோதரர்கள் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தடையை மீறி ரஷ்யாவிடம் இந்தியா எண்ணெய் கொள்வனவு

### காரணம் தெரிவிக்கும் இந்திய எண்ணெய் நிறுவனங்கள்



இந்தியாவுக்கு எண்ணெய் வழங்கும் நாடுகளில் ரஷ்யா இரண்டாவது இடத்தை வகித்து வருவதால் அதற்காக உக்ரைன் யுத்தத்தை நடத்துவதற்கு இந்திய பணம் பயன்படுத்தப்படுவதாக மேற்குலகு விமர்சனம் செய்வது நியாயமற்றது என இந்திய எண்ணெய் நிறுவனங்கள் தெரிவித்திருப்பதோடு மேற்குலக நாடுகள் திரைமறைவில் இன்றைக்கும் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் கொள்வனவில் ஈடுபட்டிருப்பதை என்னவென்று புரிந்து கொள்வது எனக் கேள்வி எழுப்பியுள்ளன.

ஈரானிடமிருந்தும் வெனிசுலாவிடமிருந்தும் எண்ணெய் கொள்வனவு செய்யக்கூடாது என தடைவிதிக்கப்பட்டபோது அந் நாடுகளிடமிருந்து கொள்வனவை இந்தியா நிறுத்தியிருந்தபோதும் சீனா தொடரந்தும் அந் நாடுகளில் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்து வந்தது. சீனா அவ்வாறிருக்கும் போது இந்தியா ஏன் எண்ணெய் கொள்வனவை வர்த்தகமாக பார்க்கக்கூடாது?

ஒரு வருடத்துக்கு முன்னர் தினமொன்றுக்கு 33 ஆயிரம் பீப்பார் ரஷ்ய மசகு எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்தது.

கடந்த ஏப்ரல் மாதம் 2 லட்சத்து 77 ஆயிரம் பிப்பாய்களாக இது உயர்ந்ததோடு கடந்த மேமாதம் முதல் தினசரி 8 லட்சத்து 19 ஆயிரம் பீப்பாய்களாக தினசரி இறக்குமதி உயர்ந்துள்ளது.

ஈராக்குக்கு அடுத்ததாக ரஷ்யாவே இந்தியாவுக்கு எண்ணெய் வழங்கும் பிரதான நாடாகத் திகழ்கிறது.

# இந்தியாவின் உருக்கு உற்பத்தி இரு மடங்காகும்

### புதிய உருக்கு அமைச்சர் ஆரூடம்



நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உருக்கு உற்பத்தித்துறை கணிசமான பங்களிப்பு செய்து வருவதாகக் கூறியுள்ள புதிதாக உருக்கு அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா, அடுத்த எட்டு ஆண்டுகளில் உற்பத்தியை இரட்டிப்பாக்குவேன் என சூளுரைத்துள்ளார்.

தற்போது ஆண்டு உற்பத்தி 120 மெட்ரிக் தொன்னாக இருப்பதாகவும் எட்டு ஆண்டுகளில் 240 மெட்ரிக் தொன்களாக அதிகரிக்கும் என்று கூறியுள்ள அவர் உலகின் இரண்டாவது பெரிய உருக்கு உற்பத்தியாளராக இந்திய விளங்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்தியாவின் மொத்த உருக்கு உற்பத்தியில் 52 சதவீதமானது சிறிய மற்றும் நடுத்தர உருக்கு உற்பத்தியாளர்களின் பங்களிப்பாக உள்ளது. சுமார் மூவாயிரம் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் களத்தில் உள்ளனர்.

# காயமடைந்த இராணுவ வீரர்களை பதில் ஜனாதிபதி நேரில் பார்வையிட்டார்

**ஸாதிக் ஷிஹான்**



காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வரும் இராணுவ வீரர்களை பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோர் இராணுவ வைத்திய சாலைக்கு சென்று பார்வையிட்டனர்.

கடந்த புதன்கிழமையன்று (13) பத்தரமுல்ல, பாராளுமன்ற வளாகத்திற்கு அருகில் கடமையில் இருந்தபோது ஆர்ப்பாட்டக்காரர்களால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு பலத்த காயங்களுக்கு உள்ளான படை வீரர்களின் உடல்நலம் குறித்தும் அவர்கள் முகம் கொடுத்த நிலைமைகள் தொடர்பாக நேரில் கேட்டறிந்து கொண்டார்.

பாராளுமன்றத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் படைவீரர்கள் மேற்கொண்ட அர்ப்பணிப்பு மற்றும் ஆற்றிய சேவைகளுக்கு இதன்போது பாராட்டுக்களை தெரிவித்தனர்.

அர்ப்பணிப்புடன் கடமையில் ஈடுபட்ட குறித்த இராணுவ வீரர்களுக்கு சிறந்த மருத்துவ வசதிகள் மற்றும் தேவையான நலன்புரி வசதிகளை மேலும் வழங்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் இராணுவ சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பிரிகேடியர் கிரிஷாந்த பெர்னாண்டோ ஆகியோருக்கு பணிப்புரை விடுத்தனர்.

# யாரை ஆதரிப்பது என பொது ஜன பெரமுன இன்னும் தீர்மானிக்கவில்லை

### நாளை தான் இறுதி முடிவு என்கிறார் அலிசப்ரி எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



புதிய ஜனாதிபதிக்கான தெரிவில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க பொதுஜன பெரமுன எத்தகைய தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை எனவும் நாளை 19ஆம் திகதியே அதுதொடர்பில் கலந்துரையாடி தீர்மானமொன்று எட்டப்படும் எனவும் முன்னாள் நீதியமைச்சர் அலிசப்ரி எம். பி தெரிவித்தார்.

தனிப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம் ஆனால் கட்சி என்ற வகையில் இதுவரை பொதுவான எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேட்புமனு தாக்கல் செய்த பின்னரே அதுதொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும். எனினும் ஜனாதிபதி தெரிவில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது என பொதுஜ பெரமுன இதுவரை எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை. நாளை 19ஆம் திகதியே அது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எதிர்க்கட்சிகளை இணைத்து கூட்டணி அரசு உருவாக்கவே போட்டியிடுகிறேன்

### டளஸ் அழகப்பெரும எம்.பி அறிவிப்பு



பிரதான எதிர்க்கட்சி மற்றும் பிற எதிர்க்கட்சிகளுடன் வரலாற்றில் முதல் கூட்டணி அரசாங்கத்தை கட்டியெழுப்புவதற்காகவே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தீர்மானித்ததாக பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மோசடி அரசியல் கலாசாரத்திற்கு முடிவு கட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் தனது ட்விட்டர் கணக்கில் பதிவு ஒன்றை மேற்கொண்டு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பில் போட்டியிடுவதாக அவர் ஏற்கெனவே அறிவித்துள்ள நிலையில் நேற்று அவர் கருத்தை வெளியிட்டுள்ளார். இதேவேளை, புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான வேட்புமனுக்கள் 19ம் திகதி ஏற்கப்படவுள்ளன. ஜனாதிபதி நியமனம் எதிர்வரும் 20ஆம் திகதி இரகசிய வாக்கெடுப்பு மூலம் மேற்கொள்ளப்படும் என பாராளுமன்றம் பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்க குறிப்பிட்டுள்ளார். (பா)

# டளஸ் ஜனாதிபதி, சஜித் பிரதமர் கட்சிகளிடையே பெயரளவில் இணக்கம்

### மு. கா தலைவர் ரவூப் ஹக்கீம்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



டளஸ் அழகப்பெரும ஜனாதிபதியாகவும் சஜித் பிரேமதாச பிரதமராகவும் வருவதற்கு பெயரளவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டு வருகிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி தெரிவித்தார். பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி வேட்பாளராக டளஸ் அழகப்பெரும போட்டியிடும் நிலையில் சஜித் பிரேமதாசவும் களமிறங்குகின்றார். ஏன் ஒன்றாக பேச்சுவார்த்தை நடத்தி விட்டு இரண்டு பேரும் வெவ்வேறாக களம் இறங்குகின்றனர்? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த ரவூப் ஹக்கீம் எம்பி:

வெவ்வேறாக அது தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் எமது தரப்பினர் பெயரளவில் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். அதில் ஏதும் பிரச்சினைகள் இருப்பதாக தெரியவில்லை.

அவ்வாறானால் டளஸ் அழகப்பெரும ஜனாதிபதியாகவும் சஜித் பிரேமதாச பிரதமராகவும் வருவதற்கு நீங்கள் இணக்கமா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த ரவூப் ஹக்கீம்,

பெயரளவில் அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தனிப்பட்ட ரீதியில் எனக்கு வேறு கருத்துக்கள் இருந்தாலும் குழு என்று பார்க்கும் போது அந்த குழுவில் ஒருவன் என்ற வகையில் நாம் குழுவின் பொதுவான தீர்மானத்திற்கு தலை வணங்குவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் முன்வைத்துள்ள

## மக்கள் கவுன்சில் யோசனைக்கு பதில் ஜனாதிபதி ரணில் வரவேற்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**


அமைதியான போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களின் தலைவர்கள் அரசாங்கத்திற்கு கையளித்துள்ள யோசனைகளில் மக்கள் கவுன்சில் ஒன்றை அமைப்பது என்பது சிறந்த யோசனையாக உள்ளதாகவும் அதனைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும் பதில் ஜனாதிபதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அவர் மேற்கொண்ட விசேட பேச்சு வார்த்தையின் போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ஊழல் மோசடி இடம் பெறுவது தொடர்பில் போராட்டக்காரர்கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றனர்.

அரசாங்கமானது அது தொடர்பில் கவனம் செலுத்துவதுடன் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கு மேற்கொள்ள

04



## தமிழர் அபிலாஷைகளையும் உள்வாங்க மனோ வலியுறுத்து

குமார் குணரத்தினத்திடம் கோரிக்கை விடுப்பு



“நாட்டின் அரசியல் கலாசாரத்தினை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதை புறந்தள்ளி செயற்படுவது முறையானதல்ல. மீண்டும் பழைய பாதையிலேயே போகக் கூடாது” என முன்னிலை சோஷலிச கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரத்தினம் கூறுகிறார். இதுவே எமது கொள்கையாகவும் இருக்கிறது. இதனாலேயே நாம் எப்போதும் ராஜபக்ச அரசியல் கலாசாரத்தை எதிர்த்து வந்துள்ளோம்.

ஆனால், இந்த உத்தேச புதிய அரசியல் கலாசாரம், தமிழர் அபிலாஷைகளையும் வெறும் ஒருசில கோஷங்களுக்கு அப்பால் சென்று, கோட்பாடுகளாக உள்வாங்க வேண்டும். இதை போராட்டக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு குமார் குணரத்தினத்தின் முன்னிலை சோஷலிச கட்சியும்,

04

## வீரகேசரி பிரதி ஆசிரியர் ரேணுகாவின் தாயார் காலமானார்



வீரகேசரி வார வெளியீட்டின் பிரதி ஆசிரியர் ரேணுகா பிரபாகரனின் தாயார் பார்வதி தியாகராஜா நேற்று முன்தினம் சனிக்கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை இடம்பெற்று மாலை 04.00 மணிக்கு பொரளை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

பெற்றோருடன் குளிக்கச் செல்கையில்

## முதலை இழுத்துச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு



முதலையால் இழுத்துச் செல்லப்பட்ட 7 வயது சிறுவனின் சடலம் (16) காலை குளத்தின் 20 அடிக்கு மேல் பள்ளத்தில் கண்டெடுக்கப்பட்டது.

கடற்படையின் நீர்மூழ்கிக் குழுவினராலே சிறுவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

குறித்த சிறுவன் (15) காலை தனது தாய், தந்தை மற்றும் 11 வயது சகோதரியுடன் சீகிரிய கும்புக்கந்தவல பிரதேசத்திலுள்ள துன்னபிந்துனு வாவியில் நீராடச் சென்ற போதே சிறுவனுக்கு இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.


சிறுவனை காப்பாற்ற தந்தை பல நிமிடங்கள் முயற்சி

04

ஜனாதிபதி தெரிவில் நடுநிலை வகிக்க முடிவு;

## கோரிக்கைகளை ஏற்றால் ஆதரவு குறித்து பரிசீலனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதி தெரிவில் நடுநிலை வகிப்பது என்ற நிலைப்பாட்டில் தமது கட்சியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் உள்ளதாக முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி .வி விக்னேஸ்வரன் எம்பி தெரிவித்தார்.ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் நடு நிலை வகிப்பதென்ற நிலைப்பாட்டில் நாம் உள்ள நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்கள் எமது கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் நிலைப்பாடு மாற்றமடையலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

04

## எரிபொருளை பெறுவதற்காக நீண்ட வரிசையில் நின்றவர்களை மோதித் தள்ளிய கார்

பாக்ரின் கவனக்குறைவால் இருவர் காயம்



அளுத்கம பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழுமியிருந்தவர்களை வைத்தியர் ஒருவர் ஓட்டிச்சென்ற கார் மோதியதில் எரிபொருளுக்கு நின்ற இருவர் காயமடைந்து (16) களுத்துறை நாகொட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

பெந்தோட்டை ஹபுருகல மற்றும் மஹாவில பிரதேசத்தில் வசிக்கும் (30) வயதுடைய இரு சாரதிகளே விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

04


## அறிவித்தல்!
## இலங்கை வங்கி

கட்டுவல்லேகம கிளையை இல: 19, திவுலபிட்டிய வீதி, மினுவன்கொடையில் அமைந்துள்ள மேற்தர கிளையோடு இணைத்தல்.

2022 ஜூலை 18 (திங்கட்கிழமை) முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் கட்டுவல்லேகம கிளையை இல: 19, திவுலபிட்டிய வீதி, மினுவன்கொடையில் அமைந்துள்ள மேற்தர கிளையோடு இணைக்க இலங்கை வங்கியின் முகாமைத்துவக் குழு முடிவு செய்துள்ளது என்பதை எமது வாடிக்கையாளர் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்செயற்பாடானது எமது கிளையை எளிதாக அணுகவும் எமது உயர்மட்ட சேவையை உங்களுக்கு வழங்கவும் வசதியாக அமையும்.

உதவிப் பொது முகாமையாளர்
(மேல் மாகாணம் வடக்கு)

1975 BOC CALL CENTRE www.boc.lk
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

















# பெற்றோல், டீசல் விலைகள் 20 ரூபாவினால் குறைப்பு

## IOC யும் விலைகளை குறைத்தது

எரிபொருள் விலையை குறைக்க சிபெட்கோ நிறுவனம் தீர்மானித்துள்ளது.

நேற்று இரவு 10 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு விலை குறைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 92 ஒக்டேன் வகை பெட்ரோலின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 450 ரூபாவாகும்.

அத்துடன் 95 ஒக்டேன் வகை பெட்ரோலின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது டன் புதிய விலை 540 ரூபாவாகும்.

இதேவேளை ஒட்டோ டீசலின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 440 ரூபாவாகும். மேலும் சுப்பர் டீசலின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது டன் புதிய விலை 510 ரூபாவாகும்.

இதே வேளை லங்கா ஐஓசி நிறுவனமும் எரிபொருள் விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## காட்டு யானை தாக்கி...

தந்தையான 65 வயதுடைய சரத்சந்திர மற்றும் திம்புலாகல பலாட்டிய பகுதியைச் சேர்ந்த 47 வயதான டி.எம். மூன்று பிள்ளைகளின் தந்தையான 47 வயதான செனவிரத்ன பண்டா, சாலியவெவ நிலம்பம்மா பிரதேசத்தில் வசிக்கும் 76 வயதான பிரேமதாச என்ற விவசாயிகளே உயிரிழந்துள்ளனர்.

செனவிரத்ன என்பவர் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் வயலுக்கு வரும் காட்டு யானைகளிடம் இருந்து நெற்பயிர்களை காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது காட்டு யானை தாக்கியுள்ளது.

யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்திருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நவதகரில் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு உள்ளான மூன்று பிள்ளைகளின் தந்தையான சரத்சந்திர என்பவர் தனது விவசாய நிலத்தை காட்டு யானைகளிடமிருந்து பாதுகாக்க நண்பருடன் சென்ற போது காட்டு யானை துரத்தியுள்ளது. தப்பி ஓடும்போது விழுந்ததில் யானை அவரை நசுக்கிக் கொன்றதாக பொலிஸார் கூறுகின்றனர்.

சாலியவெவ மேமதாச என்ற விவசாயி, தேவைக்காக வீட்டில் இருந்து வெளியே வந்த போது காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளானார். (பா)

## கொரோனா 04ஆவது ...

நான்காவது டோஸ் பெற்றுள்ளதாகவும், அதன்படி 13,000 பேர் மட்டுமே எனவும் தெரிவித்துள்ள அவர், தற்போது அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் பல குறிப்பிடத்தக்க நாடுகளில் கொவிட்19 மீண்டும் தலைதூக்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். பல நாடுகளில் கொவிட்19 மீண்டும் தலைதூக்கி வருவதாகத் தெரிவிக்கப்படும் தவல்களின் பின்னணியில், இலங்கை மக்கள் நான்காவது டோஸை பெறுவதில் அலட்சியம் காட்டினால், அது அவர்களை மீண்டும் ஆபத்தான நிலைக்குத் தள்ளலாம் எனவும் கூறியுள்ளார்.

## ஜனாதிபதி தெரிவுக்...

மேலும் குறிப்பிடுகையில் , பாராளுமன்றத்தினுள் ஜனாதிபதியை தெரிவு செய்யும் போட்டியில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க போட்டியிடவுள்ளார். தற்போது எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய எமது தலைமைத்துவத்தின் கீழ் , ஏனைய கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் இடைக்கால அரசாங்கத்தை அமைத்து பொது மக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் முன்வைத்துள்ள பரிந்துரைகளைக் கவனத்திற் கொண்டு குறித்த இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும். இந்த பொறுப்பை ஏற்று நாட்டை நிர்வகிப்பதற்கு நாம் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## உணவு நெருக்கடியை...

“இலங்கையில் சுமார் 6 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதிப்படுவதாக கூறப்படுகிறது. சில அறிக்கைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் 7.5 மில்லியன் பேர் வரை இருக்கலாம் என்று கூறுகின்றன. இலங்கையின் சராசரி நெல் உற்பத்தி பொதுவாக 24 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும். இருப்பினும், 2021 இல் 16 மில்லியன் மெட்ரிக் தொன்களே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எனவே இலங்கை தனது அரிசி தேவையில் மூன்றில் ஒரு பகுதியை இறக்குமதி செய்ய வேண்டும். உணவு பாதுகாப்பு தொடர்பான G7 உலகளாவிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் உலக வங்கியும் 14 பில்லியன் அமெரிக்க டொலர்களை உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு எமக்கு வழங்க முன்வந்துள்ளது. அவர்களுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அரசாங்கம் நல்லதொரு பாதுகாப்புத் திட்டத்தையும் முன்னெடுத்துள்ளது” என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

“இலங்கையின் பொருளாதார நெருக்கடி தவறான பொருளாதார கொள்கைகள் என்றாலும் உலகளாவிய நெருக்கடி மற்றொரு முக்கிய காரணமாகும் . உக்ரைன் யுத்தம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் எங்களைப் பாதிக்கின்றன. பொருளாதாரத் தடைகள் எங்களைப் பாதிக்காது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது.

இருப்பினும், அது மூன்றாம் உலகத்தை பாதிக்கும். ரஷ்யாவும் உக்ரேனும் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் மற்றும் பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்க்கபட வேண்டும், “என்று அவர் மேலும் கூறினார்.

## இடைக்கால ஜனாதிபதி...

தாம் ஆதரிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்வுக்கான விடயம் தொடர்பில் சஜித் பிரேமதாச என்னுடன் பேசியிருந்தார். அதன்போது அவர் என்னை தனது தந்தையின் நண்பர் என்றும் தனக்கு குறித்த ஜனாதிபதி தேர்வின்போது ஆதரவு தருமாறும் கோரியிருந்தார்.

ஆனால் நான் கருத்தில் எடுப்பதாக தெரிவித்திருந்தபோதிலும் குறித்த போட்டியில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் அவரையே ஆதரிக்கவுள்ளேன்.

மேலும் போராட்டக்காரர்கள் தங்களது நிலைமையை உணர்ந்து அமைதிவழியில் இந்த பிரச்சினையை சமாளிக்க எண்ணுகின்றனர். இது குறித்து பதில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி எனது கருத்தையும் அவரிடம் முன்வைத்திருந்தேன். குறிப்பாக குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களின் போராட்டத்தில் முன்வைக்கும் நியாயத்தன்மைக்கு ஏற்ப தீர்வு காணப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

அதற்கு அவர் அதைத்தான் தானும் எண்ணியிருப்பதாகவும் 20 ஆம் திகதி பாராளுமன்றில் தான் எஞ்சிய காலத்திற்கான ஜனாதிபதியாக நியமனமானால் அவர்களை அழைத்து பேசவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் கவுன்சில்... (03 ஆம் பக்கத் தொடர்)

வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். அத்துடன் அந்த நடவடிக்கைகள் தொடர்பில் போராட்டக்காரர்களுக்கு அறிவிக்கப்படும்.

பதில் ஜனாதிபதியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் பதில் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ஆற்றிய உரையின் போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் கிளர்ச்சியாளர்கள் என இருதரப்பு உள்ளதாகவும் அவர்களிடையே பாரிய வித்தியாசங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

ஆரம்பத்திலிருந்தே ஆர்ப்பாட்டங்களில் சம்பந்தப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் கிளர்ச்சியாளர்களின் செயற்பாடுகளுடன் தொடர்புபடாதவர்கள்.

அழிவுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு அவர்கள் எதிரானவர்கள் என்றும் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் தொடர் ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறை செயற்பாடுகளை மேற்கொள்ளாதவர்கள் என்பது தமது நம்பிக்கை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழர் அபிலாஷைகளையும்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி கூறினார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியதாவது;

அரசியல் சட்டங்களுக்கு அப்பால் மக்கள் சக்தி உருவாகியுள்ளது. அந்த சக்தியின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டியது அதிகாரத்தில் உள்ளவர்களின் கடமையாகின்றது. அது உண்மை. ஆனால், இதே விதமான சட்டத்துக்கு அப்பால் சென்றுதான், கடந்த காலங்களில் தமிழர்கள் ஒடுக்குமுறையை சந்தித்தார்கள். இப்போதும் சந்திக்கிறார்கள்.

ஆகவே மக்கள் சக்தியை அடிப்படையாகக் கொண்ட மக்கள் சபைகள் உருவாக்கப்படட்டும். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு தீர்வுகள் வரட்டும். நாமும் அவற்றை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். ஆனால் சட்டங்கள் வரமுன் அவற்றுக்கு அப்பால் முதலில் கோட்பாடுகள் வர வேண்டும். அவையே பின்னர் அரசியலமைப்பில் இடம்பெறும்.

இப்போது போராட்டக்காரர்கள் மத்தியில், தமிழர்களின் தேசிய அபிலாசைகள் தொடர்பில், கோட்பாடுகளை நாம் காணவில்லை. எமக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு போராட்டக்கார அமைப்புகளின் ஆவணங்களில் ஒருசில மென்மையான கோஷங்களைத்தான் நாம் காண்கிறோம்.

## முதலை இழுத்துச் சென்ற... (03 ஆம் பக்கத் தொடர்)

செய்த போதிலும் முதலை குழந்தையையும் இழுத்துச் சென்றுள்ளது.

சிறுவனின் உடலில் முதலை கடித்த காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.மேற்படி சிறுவன் சீகிரிய பிரதேச பாடசாலையொன்றில் 2ஆம் தரத்தில் கல்வி பயின்று வந்தார்.

இதே வேளை கதிர்காமம்,தெடகமுவ பகுதியில் முதலை தாக்கி 13 வயது சிறுவன் ஒருவர் காயமடைந்துள்ளார். முதலையிடம் இருந்து மீட்கப்பட்ட சிறுவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குடும்பத்தாருடன் நீராடும் போது இந்த சம்பவம் நடந்துள்ளது.

## கோரிக்கைகளை ஏற்றால்... (03 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் எந்த வேட்பாளர்களும் தமக்கு ஆதரவளிக்குமாறு எம்மிடம் இதுவரையில் கோரவில்லை. அவ்வாறு அவர்கள் கோரினால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் உறுதிமொழி வழங்கும் பட்சத்தில் எமது நிலைப்பாடு மாறலாம்.

ரணில் விக்கிரமசிங்க சிரேஷ்ட அரசியல் தலைவர். சிறந்த அனுபவம் உள்ளவர். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அவருடன் இணைந்து செயற்படுவதில் எமக்கு பிரச்சினை கிடையாது. அவரது அமைச்சரவையில் இணைந்துகொள்வதற்கான எந்த எண்ணமும் எமக்கு கிடையாது. என்றாலும் அவருக்கு மூன்று நிபந்தனைகளை முன்வைத்திருந்தேன். அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும், வடக்கு கிழக்கிலுள்ள தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

வடக்கில் மேலதிகமாக உள்ள இராணுவத்தினர் அகற்றப்பட வேண்டும். அரைவாசியாக குறைக்கப்பட வேண்டும்.

## சர்வகட்சி கூட்டத்தை...

இந்த கூட்டமானது நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதன்போது, இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் விபரமளிப்பர் என குறிப்பிடப்படுகின்றது. இதன்போது, இலங்கை தற்போதைய நெருக்கடி நிலைமை, தமிழகத்திற்கு அகதிகளாக செல்பவர்கள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளதாக இந்திய நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் பிரல்ஹாட் ஜோசி தெரிவித்துள்ளார்.

## ஒரு வாரத்திற்குள்...

மற்றும் ஒரு கப்பலும் நாளை 19ஆம் திகதி 35 ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோலுடன் கப்பல் ஒன்றும் நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டுக்கு வருகை தரவுள்ள டீசல் மற்றும் பெற்றோல் கப்பல்கள் தொடர்பில் பெட்ரோலியக் கூட்டத்தாபனம் நேற்று தெரிவிக்கையில்: டீசல் கப்பலுக்கான முழு தொகையும் செலுத்தப்பட்டுள்ள அதேவேளை பெட்ரோல் கப்பலுக்காக 30 வீத பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அதே வேளை, இவற்றுக்கு மேலதிகமாக 35 ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோலுடன் கப்பல் ஒன்று எதிர்வரும் 22 ஆம் தேதி அல்லது 23ஆம் திகதி நாட்டை வந்தடையும் என்றும் கூட்டத்தாபனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 31,500 மெற்றிக் தொன் சுத்திகரிக்கப்படாத எரிபொருள் மற்றும் 90 ஆயிரம் மெட்ரிக் தொன் மசகு எண்ணெயுடன் மேலும் இரண்டு கப்பல்கள் எதிர்வரும் வாரத்தில் கொழும்பு துறைமுகத்தை வந்தடையும் என்றும் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

## துப்பாக்கிகளை தேடி...

அமைச்சரவை தீர்மானத்தின் பின்னர் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார்.

காணாமல் போன துப்பாக்கிகளைக் கண்டுபிடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த சில நாட்களாக ஜனாதிபதி மாளிகையில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்களின் கைரேகைகள் அனைத்தையும் பொலிஸார் பெற்று அரசிடம் ஒப்படைத்துள்ளனர்.

எதிர்கால பயன்பாட்டிற்காக அவை பாதுகாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாவிலிருந்து...

மு.க.ஸ்டாலினுக்கு கடந்த சில தினங்களுக்கு முன்பு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனால் ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் முதல்வர் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார். தொடர்ந்து காய்ச்சல் மற்றும் உடற்சோர்வு இருந்ததன் காரணமாக அவர் கடந்த 14ஆம் தேதி சென்னை காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கொரோனா அறிகுறியினால் பரிசோதனை மற்றும் கண்காணிப்புக்காக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக மருத்துவமனை நிர்வாகம் அறிவித்தது. அத்துடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல்நிலை சீராக உள்ளது. உடல்நிலையில் முன்னேற்றம் உள்ளது. தற்போது அவர் வேகமாக குணமடைந்து வருகிறார்.

## வேட்பாளர் பெயர்கள்...

பேச்சாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன், ஜனநாயக ரீதியில் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டே தாம் தொடர்ச்சியாக அரசியல் கட்சிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளான புளொட் மற்றும் ரெலோ என்பன அடுத்து அமையவுள்ள அரசாங்கத்தில் தாம் இணைந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்துள்ளன. புளொட் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் நாம் அரசாங்கத்தின் பங்காளிகளாகச் செயற்படப்போவதில்லை. இருப்பினும் நாட்டின் ஸ்திரத்தன்மையொன்று ஏற்படுவதற்காக தமிழ் மக்களின் அபிலாஷைகளை மீறாத வகையில் எமது ஒத்துழைப்புக்களை வழங்குவோம் என்று குறிப்பிட்டார்.

அத்துடன், அமையப்பெறுகின்ற அரசாங்கமானது நாட்டின் ஸ்திரமான அரசியல் நிலைமைகளை ஏற்படுத்துவதோடு, பொருளாதார நெருக்கடிகளை போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

குறிப்பாக, இந்த நெருக்கடிகளின் மூலவேராகவுள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விடயங்களில் கவனம் செலுத்தவேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எரிபொருள் நாட்டுக்கு...

கஞ்சன் விஜேசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் தேசிய எரிபொருள் அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. https://fuelpass.gov.lk என்ற இணைத்தளம் மூலம் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். வாகனங்களை வைத்திருக்கும் நபர்கள் அந்த வாகனத்தின் பதிவு இலக்கம் மற்றும் அதன் செஸி இலக்கத்திற்கு அமைய பதிவு செய்ய முடியும். அதன் பின்னர், இலங்கை கனியவள கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஒ.சி நிரப்பு நிலையங்களில் இது எப்போது நடைமுறையாகும் என்பது அமைச்சினால் அறியப்படுத்தப்படும்.

கொடுப்பனவு செலுத்தப்பட்ட இரண்டு டீசல் கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளன. இரண்டு கப்பல்களில் இருந்தும் டீசலை தரையிறக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். அத்துடன் கொடுப்பனவு செலுத்தப்பட்ட பெற்றோல் கப்பலொன்று 18 ஆம் அல்லது 19 ஆம் திகதிகளில் நாட்டை வந்தடைய உள்ளது.அத்துடன், கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ள மற்றுமொரு பெற்றோல் கப்பல் எதிர்வரும் 22 ஆம் அல்லது 23 ஆம் திகதிகளில் நாட்டை வந்தடைய உள்ளது. நாட்டுக்கு எரிபொருள் வந்தாலும் கனியவள கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வரிசையில் காத்திருக்க வேண்டாம் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். பெற்றோலும், டீசலும் தரையிறக்கப்பட்டதன் பின்னர், இந்த முறைமைக்கு அமையவே எரிபொருள் விநியோகம் இடம்பெறும். எனவே கனியவள கூட்டுத்தாபன நிரப்பு நிலையங்களுக்கு அருகில் வரிசைகளில் காத்திருக்க வேண்டாம். எதிர்வரும் சில நாட்களுக்கு இந்த நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் வரையில், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமானது தற்போது முன்னெடுக்கப்படும் முறைமையை தொடர்ந்து முன்னெடுக்கும். நாட்டில் கையிருப்பில் உள்ள எரிபொருளுக்கு அமைய இந்த கோட்டா முறைமையும் மாறுபடும்.

## தேசிய எரிபொருள்...

வாராந்தம் தேவையான எரிபொருள் கோட்டாவை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை இலக்கம், வாகன Chassis இலக்கம் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய QR CODE புதிய அனுமதிப்பத்திரத்தில் காணப்படும் என எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒரு வாரத்திற்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ளும் வகையில் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். ஒரு தேசிய அடையாள அட்டைக்கு, ஒரு வாகனத்திற்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கும் வகையில் தேசிய அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும்.

நாட்டுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதில் எமக்கு நிதி ரீதியில் சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்பட்டது. தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை பெற இதுவரை 10 இலட்சம் பேர் தம்மை பதிவு செய்துள்ளனர்.

## எரிபொருளை பெறுவதற்காக... (03 ஆம் பக்கத் தொடர்)

மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட குறித்த வைத்தியர் தெஹிவளை பின்வத்தை பிரதேசத்தை வசிப்பிடமாகவும், மட்டக்களப்பு வைத்தியசாலையில் பணிபுரிபவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளை பிரதேசத்தில் உள்ள உறவினர் ஒருவரின் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக குறித்த தினம் காலை தெஹிவளையில் உள்ள அவர்களது வீட்டிலிருந்து தர்கா நகரில் உள்ள மற்றுமொரு உறவினர் வீட்டிற்கு செல்லும் போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வைத்தியரின் கார் காலி கொழும்பு பிரதான வீதியில் அளுத்கம நகரின் ஊடாக தெற்கு நோக்கி அதிவேகமாக பயணித்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ரஞ்சனின் விடுதலைக்கான ...

தேவையான ஆவணங்களை தயாரித்து சட்டமா அதிபர் மற்றும் பிரதம நீதியரசரிடம் ஒப்படைக்குமாறு பதில் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இதற்கமைய அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ,சிறைச்சாலை ஆணையாளரிடம் அறிக்கை கோரியுள்ளதாக அறிய வருகிறது.

## எம்.பிமார் சிலருக்கு...

வேட்பாளர்களுக்கு அழுத்தங்களை பிரயோகிப்பதாக பதில் ஜனாதிபதிக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சமூக வலைத்தளங்களில் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதால் சுதந்திரமாக வாக்களிக்க முடியாமல் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ,பதில் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டிருந்தார். இதனால் கிளர்ச்சியாளர்கள் மறைமுகமாக தங்களுக்கு கொலைமிரட்டல் விடுத்து வருவதாகவும் பதில் ஜனாதிபதியிடம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டம் மற்றும் அது தொடர்பான குற்றவியல் சட்டங்களின் கீழ் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக பாராளுமன்றத்திற்குச் செல்லவும் திரும்பி வரவும் வேண்டும் எனவும், அதற்கு எதிராகச் செயற்படுவது பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீறும் செயலாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் போது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையற்ற அழுத்தங்களையும் அச்சுறுத்தல்களையும் மேற்கொண்டால் நாட்டின் சட்டத்திற்கு அமைவாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முதல் அமைச்சரவை கூட்டத்தின் போது அமைச்சர்களிடம் தெரிவித்தார். பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் கடந்த 15ஆம் திகதி கொழும்பில் உள்ள சிலீடாவில் நடைபெற்றது. பாராளுமன்றம் கூடும் போது அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், சுதந்திரமாக கூடும் உறுப்பினர்களின் உரிமையை பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், உறுப்பினர்களின் சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## SLFP வாக்களிப்பில்...

பால சிறிசேன எம் பி தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவிக்கான வாக்களிப்பின் போது பலர் போட்டியிட்டால் எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்கப் போவதில்லை என கட்சி தீர்மானித்துள்ள நிலையிலேயே ஒருவரை ஏகமனதாக தெரிவு செய்வதே சிறந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக தமக்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்ட போதும் தாம் போட்டியிடப் போவதில்லை என தெரிவித்த அவர், எனினும் நாட்டுக்கான சேவையை அர்ப்பணிப்புடன் செய்ய தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனு தொடர்பில் பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமான அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஜனாதிபதி பதவிக்காக டளஸ் அழகப்பெரும, சஜித் பிரேமதாச என வெவ்வேறாக பலர் போட்டியிடாமல் அனைவரும் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை நடத்தி ஒருவரை நியமிப்பதே நல்லது என்பதே எனது கருத்து.

அவ்வாறு இருவரும் வெவ்வேறாக நின்று யார் வெற்றி பெற்றாலும் அதன் பின்னர் பாராளுமன்றத்தில் பாரிய பிளவுகள் ஏற்படலாம். யார் அரசாங்கத்தை பொறுப்பேற்றாலும் பிரச்சினைகள் வரலாம்.

நாம் யாருக்கு ஆதரவளிப்பது என இதுவரை தீர்மானிக்கவில்லை வேட்பு மனு தாக்கல் செய்த பின்னரே அது தொடர்பில் தீர்மானிப்போம். யார் யார் போட்டியிடப் போகிறார்கள், புதிதாக எவரும் வருவார்களா என்பது பற்றி தெளிவில்லாத நிலையில் நாம் வேட்புமனு தாக்கல் செய்த பின்னரே தீர்மானம் மேற்கொள்வோம். நாட்டுக்கு சேவை செய்வதற்கு என்னிடம் அர்ப்பணிப்பு உள்ளது. என்றாலும் பாராளுமன்றத்திற்குள் நிலவும் பிளவுளை பார்க்கும் போது எமக்கு அதற்கான வாய்ப்பு இல்லை. அதற்கான வாய்ப்பு இருந்தால் நாமும் அர்ப்பணிப்புடன் அதனை செய்வோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்று முதல் பஸ்...

தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, தொடர்ச்சியாக எரிபொருள் கப்பல்கள் நாட்டுக்கு வருகை தரும் என குறிப்பிடப்பட்டுள்ளதை தொடர்ந்து அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவைக்கு வரையறையற்ற வகையில் எரிபொருள் விநியோகிக்கப்படும் என வலுசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளதால் இன்று (18) முதல் தனியார் பஸ்கள் வழமை போல் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றார். எரிபொருள் நெருக்கடி காரணமாக பொதுப் போக்குவரத்து சேவை பாதிக்கப்பட்டுள்ளதோடு குறைந்தளவான தனியார் பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இ.போ.ச பஸ்களே கூடுதலாக சேவையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## ரணில் 140 வாக்குகள்...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ் எதிர்வு கூறலை வெளியிட்டுள்ளார்.

தற்போது நாட்டிற்குத் தேவையான விடயங்கள் குறித்து கட்சித் தலைவர் என்ற ரீதியில் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடியுள்ளேன். நான் உணர்ந்த வரையில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறைந்தது 140 வாக்குகளை பெற்று அனைவரின் ஆசியுடன் ஆட்சிக்கு வருவார். 9வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இலங்கையை மிக உயர்ந்த இடத்திற்கு உயர்த்தி காட்டுவார். இதில் சந்தேகம் கொள்ள தேவையில்லை, அவரை நம்புங்கள், அவர் 50 வருட அனுபவமுள்ள அரசியல் தலைவர் எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

# வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தில் சண்டி ஹோமம்

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு விரைவில் தீர்வு ஏற்பட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழும் நிலை நிலை ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருள் வேண்டி கொழும்பு வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலயத்தில் சண்டி ஹோமம் நடத்தப்படுகிறது. இந்த சண்டி ஹோமம் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த சண்டி ஹோமம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடத்தப்படுகிறது.

இந்த சண்டி ஹோமத்தையொட்டி தினமும் காலையும் மாலையும் விசேட ஹோமம் நடத்தப்படுகிறது. இந்த சண்டி ஹோமத்தை தொடர்ந்து தினமும் அன்னதானம் வழங்கப்பட உள்ளது.

இந்த சண்டிகா ஹோமத்தைத் தொடர்ந்து இலட்சார்ச்சனை நடைபெற இருக்கின்றது. இந்த லட்சார்ச்சனை இருபத்தி ஏழாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்தில் எதிர்வரும் முதலாம் திகதி பால்காவடி பவனி நடைபெற இருக்கின்றது.

5ஆம் திகதி தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 7ஆம் திகதி நீர்வெட்டு உற்சவமும் நடைபெற இருக்கிறது.

இந்த உற்சவ காலங்களில் தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட



இருக்கின்றது. எனவே அடியவர்கள் அனைவரும் மஹா சண்டி ஹோமத்திலும் அதுபோல் ஆடிப்பூர உற்சவத்திலும் கலந்து கொண்டு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருளைப் பெற்று உய்யுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் அழைக்கின்றனர்.

அதுபோல தினமும் நடத்தப்படுகின்ற அபிஷேகங்கள், பூஜைகளுக்குத் தேவையான பால், இளநீர், மலர்கள் ஆகியவற்றையும் வழங்கி அம்பாளின் அருள் கடாட்சத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளளப்படுகின்றது.

அதுபோல் அன்னதானத்திற்கு அவசியமான அரிசி, காய்கறிகள் போன்ற பலசரக்கு சாமான்கள் கொடுத்து அம்பாளின் திருவருள் பெற்று உய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.




## மானுடவியல்
(தொடர்)

### காரைக்கால் அம்மையார்


80

அதை கேட்ட புனிதவதியார் தன் கணவன் பரமதத்தன் இருக்கும் இடத்துக்கு அழைத்து செல்லுமாறு வேண்டினார். சுற்றத்தாரும் புனிதவதியாரை அழைத்துக் கொண்டு பரமதத்தனிடம் சென்றார்கள்.

பரமதத்தன் அதனை அறிந்து அச்சங்கொண்டு, தன்னுடைய இரண்டாம் மனைவியோடும் மகளோடும் புனிதவதியாரிடத்திற்கு வந்து, "அடியேன் உம்முடைய கருணையினாலே வாழ்கின்றேன். இந்தப் பெண்ணுக்கு உம்முடைய பெயரையே இட்டேன்" என்று சொல்லிக்கொண்டு, அவருடைய பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். உடனே புனிதவதியார் தம்முடைய சுற்றத்தார்களிடத்திலே அச்சத்தோடும் ஒதுங்கி நிற்க; அவர்கள் வெள்கி, பரமதத்தனை நோக்கி, "நீ உன்னுடைய மனைவியை வணங்குவதென்னை காரியம்" என்றார்கள். அதற்குப் பரமதத்தன் "இவரிடத்திலே ஒரு பெரிய அற்புதத்தைக் கண்டபடியால், இவர் தெய்வப் பெண்ணேயன்றி மானுடப் பெண்ணல்லர் என்று துணிந்து, இவரைப் பிரிந்தேன்; இவரை நான் தொழுந்தெய்வம் என்று கொண்டமையால், திருவடியையும் வணங்கினேன்.



நீங்களும் இவரை வணங்குங்கள்' என்றான். அதுகேட்ட சுற்றத்தார்கள் 'இது என்ன ஆச்சரியம்" என்று திகைத்து நின்றார்கள். பெறுதற்கரிய பேய் வடிவு பெறுதல்: புனிதவதியார் பரமதத்தன் சொல்லிய வார்த்தையைக் கேட்டு, பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்து, "சுவாமி! இவனுடைய கொள்கை இது, இனி இவன்பொருட்டுத் தாங்கிய அழகு தங்கிய தசைப் பொதியை நீக்கி, தேவரீரைச் சூழ்ந்து நின்று துதிக்கின்ற பேய் வடிவை அடியேனுக்குத் தந்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

(19176) திருநீறு பூசும்போது காலையில் எத்திசை நோக்கி இருந்தால் நல்லது? **காலையில் கிழக்கு நோக்கி**

(19177) மதியத்தில் எத்திசை நோக்கி இருந்தால் நல்லது? **வடக்கு நோக்கி**

(19178) மாலையில் எத்திசை நோக்கி இருந்தால் நல்லது?

**மேற்கு நோக்கி**

(19179) இது அனுஷ்டானத்திற்கும், வீட்டில் இட்டுக் கொள்வதற்கும் பொதுவானதா? **ஆம்.**

(19180) கோவிலில் பிரசாதமாகப் பெறும் பொழுது எப்படி பூசிக் கொள்ள வேண்டும். **சுவாமியைப் பார்த்துப் பூசிக் கொள்ள வேண்டும்.**

(19181) தை அமாவாசை, ஆடி அமாவாசை, மஹாளய அமாவாசை இதில் முன்னோர் வழிபாட்டிற்கு மிகச்சிறந்த நாள் எது?

**★ எல்லா அமாவாசைகளுமே முன்னோர் வழிபாட்டிற்கு மிகச்சிறந்தவை தான். அன்று அவசியம் வழிபாடு செய்து தான் ஆகவேண்டும். ஒன்று சிறந்தது என்றால் கண்டிப்பாக மற்றதை விட்டு விட வேண்டிய சூழல் வரும். உத்தராயணத்தில் முதலில் வருவதால் தை அமாவாசையும், தக்ஷிணாயனத்தில் முதலில் வருவதால் ஆடி அமாவாசையும் சிறப்பு.**

**அமாவாசைக்கு முன்னதான பிரதமையிலிருந்து விரதம் இருந்து, தர்ப்பணம் செய்ய வேண்டும். இது மற்ற திதிகளில் விடுபடும் பிதுர்க்களையும் திருப்திபடுத்த செய்யப்படுகிறது. எனவே அமாவாசை தர்ப்பணத்தைப் பொறுத்த வரை ஒன்று சிறந்தது. மற்றது தாழ்ந்தது என்ற பேச்சுக்கே இடமில்லை.**

(19183) வாஸ்து சாஸ்திரத்தை ஆன்மிகம் ஏற்றுக் கொள்கிறதா? அதை எந்த அளவிற்குக் கடைப்பிடிப்பது என்பதைக் கூறுங்கள்.

★சாஸ்திரம் என்று சொல்லிவிட்டாலே அது ஆன்மிகம் தானே. இறை வழிபாட்டிற்காக கூறப்பட்டுள்ள சாஸ்திரங்களில் ஒரு பிரிவு – சிற்பசாஸ்திரம். இதன் உட்பிரிவுகளில் ஒன்று வாஸ்து சாஸ்திரம். ஒருவீட்டைக் கட்டத் துவங்குவதற்கு முன் வாஸ்து சாஸ்திரத்தைக் கடைபிடிக்கலாம். கட்டி முடித்தபின் வீண் வதந்திகளை நம்பி குழப்பிக் கொண்டு வீட்டை இடிக்க வேண்டாம்.

(19184) பூஜை அறையில் கடவுள் திருஉருவப்படங்களை எத்திசை நோக்கி வைப்பது சிறந்தது?

**கிழக்கு நோக்கி வைப்பது சிறந்தது. மேற்கு நோக்கியும் வைக்கலாம்.**

(19185) இறந்த பெற்றோருக்கு பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால் அவர்கள் கொடுக்கும் சிரார்த்தம் ஏற்புடையதுதானா?

**பெண்கள் நேரடியாக இதை செய்யக்கூடாது. யாராவது ஒரு ஆணிடம் தர்ப்பையைக் கொடுத்து அவர் மூலமாக செய்ய வைக்கலாம். திருமணமான பெண்கள் கணவன் வீட்டைச் சார்ந்து விடுவதால், பெற்றோருக்காக தர்ப்பை கொடுக்க கூட அதிகாரம் கிடையாது. பெற்றோரின் பங்காளிகளைச் செய்யச் சொல்லி பொருளுதவி மட்டும் செய்யலாம்.**

(19184) விரதநாட்களில் உணவில் பூண்டு, வெங்காயம் சேர்க்கக்கூடாது என்று சொல்கிறார்களே உண்மையா?

**விரதம் என்ற சொல்லுக்கு "கஷ்டப்பட்டு இருத்தல்" என்று பொருள். விரதமிருப்பவர், அன்று முழுவதும் சுவாமியின் அருகிலேயே இருப்பதாக எண்ண வேண்டும். சாப்பிட்டால் மலஜலம் கழிக்க நேரிடுமே என்பதால் தண்ணீர் கூட குடிக்காமல் பசித்திருந்து, சிந்தனை மாறாமல் இருப்பதையே உபவாசம் என்ற நிலையில் முதன்மையாகக் கூறியுள்ளனர். "உபவாசம்" என்றால் "இறைவனுக்கு அருகில் இருத்தல்" என்று பொருள். முறையாக இருக்க இயலாதவர்கள் கூட அரிசி சாதத்தையும், வெங்காயம், பூண்டு இவற்றையும் தவிர்த்து விட வேண்டும். அரிசி, வெங்காயம், பூண்டு இவற்றைச் சாப்பிட்டால் தூக்கம் வரும். சிந்தனை மாறும். இதனால் தான் இவற்றை வேண்டாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.**

# களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம்

வரலாற்று சிறப்புமிக்க களுவாஞ்சிகுடி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய ஆடி அமாவாசை மஹோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 18.07.2022 ஆம் திகதி வாஸ்து சாந்தி கிரியை, கிராமசாந்தி கிரியை, அட்ட திக்கு பாலகர்களுக்குரிய வேள்விகள் மற்றும் மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம் போன்ற கிரியைகள் நடைபெற்று மறுநாள் 19.07.2022 ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28.07.2022ஆம் திகதி ஆடி அமாவாசைதினத்தன்று இந்து சமுத்திர தீர்த்த உற்சவத்துடன் மஹோற்சவம் நிறைவடையவுள்ளது.

**ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வரலாறு**

களுவாஞ்சிகுடியின் வரலாற்றுக்கு 1107ஆம் ஆண்டு மிக முக்கியமான ஒரு ஆண்டாகும். அக்காலப் பகுதியில் வாழ்ந்து வந்த கவுத்தன் குடிமக்கள் தங்களது குலதெய்வமான ஸ்ரீ வீரபத்திர சுவாமிக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்து வந்த விடயத்தினை பழம்பெரும் கதைகள் சித்தரிக்கின்றன.

கரையோரக் கிராமமான களுவாஞ்சிகுடியின் ஊடாக கல்முனையிலிருந்து அதாவது மட்டுநகர் செல்வதற்குரிய காடுகள் நிறைந்த நடைபாதை ஒன்று இருந்தது. அதாவது தற்போது இருக்கும் காபட் பிரதான வீதியே அது. மாணிக்க பிள்ளையார் ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் அக்காலத்தில் ஒருபெரிய வேம்புமரம் இருந்ததாம். அந்த வேம்பு மரத்தடியில் பிள்ளையார் உருவத்தை கொண்ட கல்லினை கண்டெடுத்ததாகவும் இவற்றினை மனதார நினைத்து மனதில் நிறுத்தி மேற்படி குடிமக்கள் பூசித்து வந்ததாகவும் இவர்கள் வாழ்ந்த காலத்தில் மாணிக்கன் செட்டி, மாதவன் செட்டி, சுந்தரம் செட்டிஎன்ற மூன்று அண்ணன் தம்பிமார்கள் கவுத்தன் குடியாருடன் உறவாடி வாழ்ந்து வந்தனர். இவர்களில் மாணிக்கன் செட்டி தெய்வப்பற்று மிகுந்தவனாக திகழ்ந்ததுடன் கவுத்தன்குடியாருடன் சேர்ந்து பிள்ளையாருக்கு கொத்துப் பந்தல் இட்டு வழிபட்டு வந்தனர். இக்கிராமத்தில் உள்ள அனைத்துகு டிகளும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக ஓலைக்கிடுகினால் கோவில் கட்டி வழிபடத் தொடங்கினர். இன்னும் பல வருடங்கள் சென்ற பின்பு ஆலய வழிபாட்டு முறைகள் விஸ்த்தரிக்கப்பட்டன .வரலாற்று புகழ்மிக்க இவ்வாலயம் புதுப்பொலி கண்டது அதாவது வழிபாட்டு முறைகள் விதிமுறைகள் தெரிந்த குழுக்கள் குடியினர் தம்பட்டை, கோரக்களப்பு, தம்பிலுவில் இருந்து வரவழைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இன்னும் சிலகாலம் சென்று பின்னர் களுவாஞ்சிகுடி எல்லாகுடி மக்களும் வம்சங்களும் சேர்ந்து1885 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீற்றால் ஒருசெங்கற் கோவிலை கட்டினார்கள்.

இதற்கு செங்கற்கள் வெட்டகளிமண் எடுத்த மடுவே எமது ஆலயத்திற்கு பின்புறமாகவுள்ள'வாவி'மடுவாகும் இப்படியானஆலயத்தை கட்டிமுடித்து1890ம் ஆண்டுமகாகும்பாபிஷேகம் செய்துவழிபட்டனர்.

நாராயணபிள்ளை நாகேந்திரன் (JP)...
ஓய்வு நிலைஅதிபர், களுவாஞ்சிகுடி

# நாதப் பிரம்ம யோகம் - 28



இசை என்பது உலகெங்கிலும் உள்ளஅனைத்து கலாசாரங்கள் அல்லது மொழிகளின் இன்றியமையாத ஒரு அமிசமாகும். வாழ்க்கையில் மெல்லிசை இல்லையென்றால் அதுசலிப்பாகவும், வறண்டதாகவும், மந்தமாகவும் மாறும். இசையறிவு என்பது இலக்கியம் மற்றும் கலைகள் பற்றி மனிதர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து அறிவுத் திறன்களிலும் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இது மகிழ்ச்சியான புத்துணர்ச்சியின் மூலமாக மனிதனை மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்துகிறது.

வெப்ப விளைவுகள் ஜட த்தின் பௌதீக செயல்பாடுகளைத் தூண்டுகின்றன, அதேபோல் பொருட்களில் உள்ள சேதன உணர்வு சக்தியை விழிப்பிப்பதில் ஊக்க சக்தியாக இசை செயல்படுகிறது. எங்கும் நிறைந்த 'ஒலி' (உதாரணமாக, ஹிக்ஸ் போசானைச் சுற்றியுள்ள 'நித்தியமான புலத்தில் உள்ள ஆற்றல் அலைகளின் தாள அதிர்வுகள், எலக்ட்ரான்கள் போன்றது களின் இயக்கத்தைத் தூண்டுகிறது, அவைபின்னர் இயற்பியல் உலகில் பல்வேறு செயல்பாடுகளை உருவாக்குகின்றன. இந்த விஞ்ஞானத்தின் அவதானிப்பு பண்டைய இந்திய ரிஷிகளின் ஓங்கார நாதத்தின் விளக்கங்களுடன் ஒத்து வருகிறது.

ஆரம்பத்தில் ஓம் என்ற எழுத்தின் வடிவம் அனைத்து திசைகளிலும் ஒரே மாதிரியாக வியாபித்திருக்கும் அதன் சர்வ வியாபியான தாளத்தைக் குறிக்க ஒரு ஸ்வஸ்திக் வடிவில் ரிஷிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அடையாளம் பின்னர் சமஸ்கிருத எழுத்தில் அதன் தற்போதைய வடிவத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இயற்கையின் முழு விளையாட்டின் விதிகளும், உயிருள்ள உலகில் உணர்வின் வெளிப்பாடும், எங்கும் நிறைந்த ஆழ்நிலை இசையின் நித்திய அலைகளை அடிப்படையாகக் கொண்டது. இது நாத பிரம்மத்தின் சக்தியின் தாளஓட்டம். நமது மூளை ஒரு வினாடிக்கு சுமார் 30 முதல் 31 எண்ண அலைகள் என்ற விகிதத்தில் தொடர்ந்து தூண்டுதல்களை வெளியிடுகிறது. நாம் ஒரு திரைப்படத்தைப் பார்க்கும் போது, ஒருநொடியில் சுமார் 16 காட்சிபடங்கள் நம் கண்களுக்கு முன்னால் கடந்து செல்கின்றன, ஆனால் அவற்றை நாம் தெளிவாக அடையாளம் காணமுடியாது. ஒருபடத்தின் ஒற்றை இயக்கமாக நாம் பார்ப்பது உண்மையில் நூற்றுக்கணக்கான காட்சி சமிக்ஞைகளின் தொடர்ந்து வேகமாக தனித்தனியாக ஓடுகிறது, ஆனால் நம் கண்கள் அவற்றைத் தனித்தனியாகப் புரிந்து கொள்வதில்லை. மூளையின் சிக்னல்களும் அப்படித்தான். ஒவ்வொரு மில்லி விநாடிகளிலும் வெளிப்படும் எண்ணற்ற தூண்டுதல்களின் சேகரிப்பு நரம்பு மண்டலத்தால் உணரக்கூடிய ஒரு சிந்தனை அல்லது சமிக்ஞையை உருவாக்குகிறது. நரம்பியல் தூண்டுதலும் அதனால் மூளை அலைகளின் வெளிப்பாடும் பிராணால் சில நுட்பமான இசையால் கட்டுப்படுத்தப்படுகிறது. பிராணனின் மின்னோட்டம்சஹஸ்ராரச்சக்கரத்தைத்தொடர்ந்து தாக்கி, இணக்கமான சூக்ஷ்சுமான ஒலியை (அல்லது நுட்பமான இசையை) உருவாக்குகிறது. இதை 'ஸோஹம்' ஒலி என்று ரிஷிகள் விபரிக்கின்றனர். இந்த ஒலியை உணர்தல் காயத்ரி மந்திரத்தின் அஜபா ஜபம் (மௌன பாராயணம்) ஆகும். 'ஸோஹம்' என்ற இந்த தொடர்ச்சியான ஒலி ஒரு நொடியில் கூட நிறுத்தப்பட்டால், நரம்பியல் தூண்டுதல் மற்றும் மூளையின் செயல்பாடுகள் நின்றுவிடும். இது மூளையில் உள்ள உயிர் மின்னோட்டங்களில் உடனடி இடையூறுக்கு வழிவகுக்கும் மற்றும் உடனடி மரணத்தை விளைவிக்கும். **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்









ஸ்ரீ சத்ய சாய் பாபா பகவான் , சீரடி சாயி பாபா இருவரையும் வழிபடும், சாயி பக்தர்களுக்கு உரித்தான புனித நன்நாள் " குரு பூர்ணிமா" தினமாகும். இதனை முன்னிட்டு கடந்த பௌர்ணமி 13 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சீரடி சாயி இராஜகோபுரத்தில், வட இந்திய சீரடி சாயி சமாஜத்தின் ஏற்பாட்டில், பூஜித்து எடுத்து வரப்பெற்ற, சீரடி சாயி "புனிதக்காவி சீரடி கொடி" இராஜ கோபுர த்தில் தலைவர் எஸ். என். உதயநாயகம் தலைமையில் ஏற்றிவைக்கப்பட்டது. நிகழ்வில் சீரடி கொடிக்கு பூஜை நடைபெற்று கொடிக்கம்பத்தில் இணைக்கப்பட்டு கோபுரத்தில் பறப்பதையும் கலந்து கொண்ட சாயி பக்தர்கள் கே. ரி. குருசாமி, நாராயணசாமி சங்கர் மற்றும் கலந்து கொண்ட பக்தர்களையும் காணலாம்.

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஆடி மாதம் 02ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 18

## குறள் தரும் சிந்தனை



துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை

ஒரு செயலைச் செய்யும் போது துன்பம் அதிகமாக வந்தாலும், முடிவில் இன்பம் தரும் அச் செயலை மனம் தளராமல் செய்க

# பொருளாதார சுமையை தணிக்கும் அவசர நிவாரண வேலைத் திட்டம்

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியானது, அரசியல் கொதிநிலையின் உச்சநிலையை அடைந்த நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ தமது ஜனாதிபதி பதவியை கடந்த 14 ஆம் திகதி இராஜிநாமா செய்தார். அதனைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பதில் ஜனாதிபதியாக உச்சநீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் கடந்த வெள்ளியன்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான சூழலில் பொருளாதார அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள மக்களின் சுமையை குறைக்கும் வகையில் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மக்களுக்கு வழங்கும் அவசர நிவாரண வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு செலவுத்திட்டத்தில் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்கு அதிக நிதியொதுக்கீட்டை மேற்கொள்ளவும் அவர் முடிவு செய்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்து அமைச்சர்களுடனும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடிய சமயம், நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு அவசர நிவாரணம் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டுதான் இத்தீர்மானத்தையும் அவர் மேற்கொண்டுள்ளார்.

உண்மையில் இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய திட்டமும் தீர்மானமும் ஆகும் என்பதே மக்களின் கருத்தாக உள்ளது. ஏனென்றால் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். அந்நெருக்கடிகளுக்கும் பொருளாதார சுமைக்கும் தீர்வையும் நிவாரணத்தையும் எதிர்பார்த்தவர்களாக மக்கள் உள்ளனர்.

இந்நிலையில் மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார அசௌகரியங்களை தணித்து கட்டுப்படுத்துவற்கு உதவும் வகையில் அவசர நிவாரண உதவி வழங்கப்படுவது அவசியம். அவ்வாறான நிவாரணத் திட்டம் மக்களுக்கு பெரும் ஆறுதலாகவும் அமையும்.

இப்பின்னணியில் பிரதமரான பதில் ஜனாதிபதி, பொருளாதார அழுத்ததுக்கு முகம் கொடுத்துள்ள மக்களின் சுமையை குறைப்பதற்கான இத்தீர்மானத்தை எடுத்திருக்கின்றார். இதன் ஊடாக மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதை அவர் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும் நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் காரணமாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தம் பதவியை கடந்த மே மாதம் 09 ஆம் திகதி இராஜிநாமா செய்தார். அதனைத் தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

இந்நாட்டில் ஆறாவது தடவையாகப் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ள இவர், தற்போது நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தாம் பெற்றுக் கொண்டுள்ள முன்னனுபவங்களின் அடிப்படையில் தீர்வு காண முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளார்.

அதற்கேற்ப இப்பதவியை ஏற்றுக் கொண்டதும் பொருளாதார நெருக்கடியைத் தணித்து கட்டுப்படுத்தும் நோக்கிலான வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுத்துள்ளார். இந்நாடு ஏற்கனவே எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளைத் தணித்து கட்டுப்படுத்தியதன் மூலம் பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில் இந்நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

இதன் நிமித்தம் நிதியுதவி வழங்கும் நாடுகளுடனும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். அதன் பயனாக சாதகமான பதில்களும் பிரதிபலிப்புகளும் ஏற்கனவே கிடைக்கப் பெற ஆரம்பித்துள்ளன.

இருந்த போதிலும் இப்பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி ஜூலை 09 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தையடுத்து கோட்டாபய ராஜபக்ஷ தம் ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்தார். அதனைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இப்பதவியை ஏற்றுக் கொண்டுள்ளதைத் தொடர்ந்து நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி முக்கிய தீர்மானங்கள் பலவற்றை மேற்கொண்டுள்ளார். அவற்றில் மக்களுக்கான அவசர நிவாரணத் திட்டமும் ஒன்றாகும். ஆகவே தற்போதைய சூழலில் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து பதில் ஜனாதிபதி முன்னெடுக்கும் தீர்மானங்களுக்கும் வேலைத்திட்டங்களுக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்படுவது அவசியம். இது நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கைப் பிரச்சினைக்கு உகந்த தீர்வு சோஷலிசம்!

## முற்போக்கு சோஷலிச கட்சியின் தலைவர் குமார் குணரத்னம் கூறுகிறார்

'இலங்கையின் பிரச்சினைக்கு உகந்த தீர்வு சோஷலிசமே' என்கிறார் முற்போக்கு சோஷலிச கட்சியின் தலைவர் **குமார் குணரத்னம்**. எமக்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.



**கேள்வி: நாட்டின் எதிர்கால அரசியல் பயணம் எவ்வாறு அமைய வேண்டும்?**

**பதில்:** கடந்த ஒன்பதாம் திகதி இடம்பெற்ற சம்பவத்துடன் மக்களின் இறையாண்மை சக்தி அடையாளம் காணப்பட்டுள்ளது. 74 வருடங்களாக எழுதப்பட்டிருந்த அரசியல் சரித்திரம் மிகவும் வித்தியாசமான முறையில் எழுதப்பட்டது. மக்கள் போராட்டத்தின் அபிப்பிராயம் அபிலாஷையுடன் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும். இந்த சம்பவம் அரசியலமைப்பின் அதிகாரத்தின் ஊடாக இடம்பெறவில்லை. இந்த சக்தி அரசியலமைப்புக்கு அப்பால் மக்களின் சக்தியாலேயே உருவானது. இது ஜனநாயக முறையில் மக்களால் உருவான சக்தியாகும். அதனால் இதன் தொடர்ச்சி நாட்டின் புதிய சட்டம் மற்றும் இணக்கமாக மாற வேண்டும்.

நியாயமற்ற அரசியல் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்களை சுருட்டி கொள்ள வேண்டும். மக்கள் தமது இறையாண்மை சக்தி மற்றும் சமூக பொருளாதார அரசியல் தேவைகளை பெற்றுக் கொள்ள இதனை சட்டமாக மாற்ற முடியும். மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் இணக்கப்பாடான அரசாங்கம் ஒன்றே உருவாக வேண்டும் .இவர்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க முடியும் என எண்ணுகிறார்கள். அந்த மக்களின் ஆணை தற்போது ரத்தாகியுள்ளது. இதுவரை இணையாத புதிய மக்கள் கருத்துகள்,விருப்பங்கள் நிறைவேறியுள்ளன.

**கேள்வி: ஜனநாயக கட்டமைப்புக்குள் காணப்படும் அரசியலமைப்பு விதிகளின் படி அடுத்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் யாராக இருக்கக் கூடும்?**

**பதில்:** இதில் இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒன்று தொழில்நுட்பம், மற்றையது அரசியல் பக்கம். தற்போதைய அரசியல் அமைப்பின் தொழில்நுட்ப நடவடிக்கையின்படி அரசியல் அமைப்பில் சில விதிகள் உள்ளன. நாம் அதற்குள் இந்த அரசியல் போராட்டத்தை மட்டுப்படுத்தினால் மக்கள் போராட்டத்தின் நோக்கங்கள் வேறு திசையில் பயணிக்கலாம்.போராட்டத்தையே முதன்மைப்படுத்த வேண்டும். கூட்டு அரசாங்கம் ஒன்று உருவாக வேண்டும். அந்தக் கூட்டு அரசாங்கத்தில் யார் ஜனாதிபதி? யார் பிரதமர்?என்பது முக்கியமில்லை, இணக்கமே முக்கியமாகும்.

**கேள்வி: நீங்கள் கூறுவது போல் பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கு அப்பால் மக்கள் அதிகாரத்தை எவ்வாறு உருவாக்குவது?**

**பதில்:** ஜனநாயகம் மக்களின் இறையாண்மை சக்தியாலேயே வலுவாகின்றது. அரசியலமைப்பு சட்டங்கள் தேவவசனங்களால் உருவான ஒன்றல்ல. அது சமூகத்தின் உருவாக்கமாகும். மக்களின் நன்மை கருதி அதனை மாற்ற முடியும். ஆட்சியில் தங்கியிருப்பதற்காக ஜனநாயகத்துக்கு எதிரான அரசியலமைப்பை உருவாக்கி உள்ளார்கள். அவற்றை சட்டமாகவும் மாற்றியுள்ளார்கள். அதனால் அதைவிட விரிவான அரசியல் மற்றும் பொருளாதார தேவைகளை நிறைவேற்றுவதற்காக மக்களின் தலையீடு நாட்டின் சட்டங்களாக மாற வேண்டும். அது முற்றிலும் ஜனநாயக ரீதியாக காணப்படுவதோடு அது நாட்டின் சட்டமாகவும் மாற வேண்டும்.

**கேள்வி: ஆட்சியில் உள்ள எந்த ஒரு அரசியல் அணியினாலும் மீண்டும் ஆட்சி அமைக்க முடியாது என நீங்கள் கூறுகின்றீர்கள். அவ்வாறென்றால் நாட்டிற்கு சோஷலிச கொள்கைகளையுடைய இடதுசாரி அரசியல் அணியின் தேவையை நீங்கள் உணருகின்றீர்களா ?**

**பதில்: முற்போக்கு சோசலிச கட்சியின் நீ**ண்ட கால இலக்கு இலங்கையில் சோஷலிசத்தை உருவாக்குவதாகும். நீண்ட காலமாக நாட்டு மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு சோஷலிச சமூக முறையிலேயே காணப்படுகின்றது. இந்த நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வு சோஷலிசமே. மக்களை இணைத்து மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை உருவாகும் கவுன்சில் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். மக்களுக்கான அரசியலமைப்பு ஒன்றின் தேவையை இன்று நாம் உணர்கின்றோம்.இறுதிவெற்றி வரை போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். அங்கு உருவாகும் தற்காலிக அரசுடன் நடவடிக்கையில் ஈடுபட்டு மிக விரைவில் சீர்திருத்தங்களை நாட்டில் ஏற்படுத்த வேண்டும். அதற்காக நாம் பல நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்பினால் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். மக்களின் கருத்து எப்போதும் ஒரே மாதிரி இருக்காது. ஜனநாயக முறையில் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

> ‘பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப சட்டம் உருவாக்கப்பட வேண்டும். நாட்டின் அரசியல் முறைமை, தேர்தல் முறைமை மாற்றப்பட வேண்டும்’

**கேள்வி: சோஷலிசம் உருவான நாடுகளில் கூட அது வீழ்ச்சி அடைந்துள்ளது. உலகமே புதிய லிபரல்வாத சமூக முறைமைக்கு பயணப்படுகையில் சோஷலிசம் என்பது கொள்கை மட்டுமே அல்லவா?**

**பதில்:** சில நாடுகளில் காணப்பட்ட சோஷலிசம் பற்றி எனக்கும் விமர்சனங்கள் உள்ளன. சோஷலிசம் என்பது உருவாக்கப்பட்ட பின் ஒரு நாளும் மாறாத ஒன்றல்ல. அதற்கு மக்கள் பங்களிப்பை வழங்கி வலுப்படுத்த வேண்டும். நவீன தொழில்நுட்ப உலகத்துடன் எம்மால் பயணிக்க முடியும். உதாரணமாக எமது நாட்டில் அதிகளவு இலாபம் பெறுகின்ற பணக்காரர்களின் இலாபம் பிரிந்து செல்லக் கூடிய முறை ஒன்றை தயாரிக்க வேண்டும். தொழிலாளர்கள் மிகவும் மோசமான நிபந்தனைகளுக்குக் கீழ் வேலை செய்தாலும் அவர்கள் பெறுகின்ற சம்பளத்தில் திருப்தி இல்லை.

**கேள்வி: மக்களின் ஜனநாயக உரிமை இந்த அரசியலமைப்பில் செயல்படாவிட்டால் மக்களுக்கான அரசியலமைப்பை எவ்வாறு உருவாக்குவது?**

**பதில்:** சர்வஜன வாக்கெடுப்பொன்று அவசியம். போராட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட யோசனைகள் பல உள்ளன. சட்ட அமைப்புக்கு அப்பால் தீவிரமான முறை ஒன்றிற்கு செல்ல வேண்டும். அதன் ஆரம்பம் கடந்த ஒன்பதாம் திகதி இடம்பெற்றது. பிரச்சினைகளை பேசும் மக்களுக்கு ஜனநாயக உரிமை வழங்கும் அரசியல் அமைப்பு ஒன்று தற்போதுள்ள சட்டங்களுக்கு அப்பால் தயாரிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களிலும் அரசியலமைப்பை காலாவதியாக்கிய சந்தர்ப்பங்கள் நாட்டில் காணப்பட்டன.

**கேள்வி: அனைத்து இனத்தாரினதும் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க ஒருங்கிணைந்த கூட்டணியை எவ்வாறு நிர்மாணிப்பது?**

**பதில்:** தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை இலங்கையர்களாகக் கருதி எமது நாடு என்ற உணர்வை ஏற்படுத்துகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும். சுதந்திரத்திற்கு பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து ஆட்சியாளர்களும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக இனவாதத்தை தூண்டினார்கள். அனைத்து ஆட்சியாளர்களும் தமிழ், சிங்கள ,முஸ்லிம் என்ற கோட்டால் மக்களை பிரித்தார்கள். அவர்கள் தங்களுடைய அரசியல் அதிகாரத்தை உறுதி செய்து கொள்வதற்கு அவ்வாறு செயல்பட்டார்கள். இந்த அரசியல் முறைக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அனைவரும் இலங்கையர்கள் என்ற மனநிலையை ஏற்படுத்த வேண்டும். அப்போது நாட்டை கட்டியெழுப்பும் பணியில் அனைவரும் தங்களது பங்களிப்பை வழங்குவார்கள். பெரும்பான்மையான சிங்கள மக்கள் இதற்கு முன்னிலை வகிக்க வேண்டும். தமிழ் ,முஸ்லிம் மற்றும் அனைத்து மக்களினதும் சந்தேகம், அவநம்பிக்கை தீர்க்கப்பட வேண்டும்.

**கேள்வி: மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுக் கொண்ட பொதுஜன பெரமுனவின் அதிகாரம் முடிவுக்கு வந்துள்ளது எனக் கூறுகிறீர்கள். மக்கள் ஆணையுடன் பாராளுமன்றத்திற்கு தெரிவான அவர்கள் பாராளுமன்ற காலம் நிறைவு பெறும் வரை தங்கி இருப்பதற்கு சட்டவிதிகள் உள்ளன அல்லவா?**

**பதில்:** அரசியலமைப்பு தொடர்பாக பேசும் சட்ட வல்லுனர்கள் மற்றும் நிபுணர்களிடம் நாம் வேண்டுகோள் ஒன்றை விடுகின்றோம். போராட்டம் மூலம் உருவாகியுள்ள ஒருமைப்பாட்டை பாருங்கள். சட்டம் என்பது என்ன? சட்டத்தை யார் உருவாக்கியது? சட்டத்தை தங்களுடைய அரசியல் தேவைகளை நிறைவேற்றுவதற்காக எவ்வாறு மாற்றுவது எனப் பார்க்க வேண்டும். மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக ஏன் நாம் புதிய சட்ட திட்டங்களை கொண்டு வரக் கூடாது?தேர்தல் முறையில் மாற்றம் அவசியம். மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் விதத்தில் நாம் புதிய சட்ட திட்டங்களை கொண்டு வர வேண்டும்.

**கேள்வி: முற்போக்கு கட்சி இந்தப் போராட்டத்தில் முன்னணியில் இருந்ததாக கருத்து உண்டு. நீங்கள் அதற்கு தலைமை வகித்த தலைவர் என்று கூறுவது சரியா?**

**பதில்:** அந்த கிரெடிட்டை முற்போக்கு சோஷலிச கட்சியோ அல்லது வேறு எந்த கட்சியோ எடுக்க முடியாது. மக்களின் போராட்டம். நாம் இந்த போராட்டத்தில் ஆரம்பம் முதல் இன்று வரை அர்ப்பணிப்புடன் எமது பங்களிப்பை வழங்கினோம். அதேபோன்று நாடே ஸ்தம்பித்திருந்த வேளையில் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் அசைக்க முடியாது என்று கூறியிருந்த வேளையில் நாம் அந்த அரசுக்கு எதிராக 2019 இல் இருந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்து வந்துள்ளோம். போராட்டம் தொடர்பாக எமது நம்பிக்கை மற்றும் மக்கள் தொடர்பில் எமக்கு இருந்த நம்பிக்கையை நாம் ஒரு சந்தர்ப்பத்திலும் கைவிடவில்லை. தேர்தலுக்கு முன்னர் மக்களின் சக்தி மூலம் போராட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். இந்த போராட்டம் இல்லாமல் நாம் முன்னேறி சென்றிருக்க முடியாது. ஒரு திருப்புமுனையை போராட்டம் அடைந்துள்ளது. இன்னும் செல்ல வேண்டியுள்ளது.

**கேள்வி: நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முற்போக்கு கட்சியின் யோசனைகள் என்ன?**

**பதில்:** நாம் எமது கொள்கை பிரகடனத்தை முன்வைத்துள்ளோம். இந்த அரசியல் முறை கட்டாயமாக மாற்றப்பட வேண்டும். எமது யோசனைகள் உள்ளன. இந்த பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ள வேளையில் யாராவது குறுகிய கால தீர்வுகள் உண்டு என்று கூறினால் அது பொய்யாகும். அரசியல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி தற்காலிக இணக்கப்பாடான அரசாங்கம் ஒன்றை உருவாக்கி மக்களுக்கு அடிப்படை பொருளாதார நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும். பொருளாதாரத்தை திறம்பட மேற்கொள்வதற்கு அரசுக்கு நிலையான தன்மை இருக்க வேண்டும். தற்காலிக கூட்டணி அரசாங்கம் ஒன்று நிலையான அரசியலுக்குப் பின்னரே உருவாக்கப்பட வேண்டும். களவெடுத்த பணத்தை பெற்றுக் கொள்வதற்கு, பணக்காரர்களிடம் பாரிய அளவில் வரி வசூலிக்கும் வழிமுறை ஒன்றையும் உருவாக்க வேண்டும்.

தேசிய பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பும் முறை மற்றும் நாட்டிற்கு பொருத்தமான விவசாய முறைகளை உருவாக்குவதற்கு முடிந்தவரை நிபுணர்களின் ஆலோசனையை பெற்றுக் கொள்ள வேண்டும். மின்சாரம்,நீர்,எரிபொருள் போன்ற துறைகளுக்கு பொருத்தமான முறைகளை பின்பற்ற வேண்டும். பொதுப்போக்குவரத்து சேவையை வலுப்படுத்த வேண்டும். இவ்வாறான முறைகள் மூலம் சில காலம் நாம் செல்ல வேண்டியுள்ளது.

**கேள்வி: இந்தப் போராட்டத்தை அறிக்கையிட சென்ற ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பாக உங்களின் கருத்து என்ன?**

**பதில்:** இந்நாட்டு வரலாறு முழுவதும் ஊடகவியலாளர்கள் கொலையுண்டதை அறிவோம். ஊடகவியலாளர்கள் தொடர்பில் காணாமல் போதல், கொலை செய்யப்படல் தொடர்பாக எந்த விதமான நியாயமும் நிறைவேற்றப்படவில்லை. சிங்கள,முஸ்லிம் மற்றும் தமிழ் என அனைத்து ஊடகவியலாளர்களையும் அரசங்கம் எவ்வாறு நடத்தியது என்பதை நாம் அறிவோம். அவர்களின் தேவைக்கேற்ப செயல்படும் ஊடகவியலாளர்களுக்கு ஒரு விதமாகவும் சுதந்திரமாக கருத்துக்களைக் கொண்ட ஊடகவியலாளர்களை வேறு விதமாகவும் அவர்கள் நடத்தினார்கள். தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க நடத்தப்பட்ட தாக்குதலாகும்.

> ‘அதிகளவு இலாபம் பெறுகின்ற பணக்காரர்களின் இலாபம் பிரிந்து செல்லக் கூடிய முறை ஒன்றை தயாரிக்க வேண்டும். பணக்காரர்களிடம் பாரிய அளவில் வரி வசூலிக்கும் வழிமுறை ஒன்றையும் உருவாக்க வேண்டும்!’

வன்முறை மற்றும் இனவாதத்தை விதைத்து மக்களை கோபமூட்ட முயற்சி செய்யும் விதத்தை நாம் கண்டோம். இவர்களின் இந்த உபாயத்திற்கு ஏமாற வேண்டாம் என மக்களிடம் கூறுகின்றோம்.

நாம் வெற்றி பெற்ற இந்த அமைதியான பலத்தின் மீது நம்பிக்கை வைப்போம். இந்த பலத்தால் வன்முறையான சூழ்ச்சியான அடக்கு முறையை வெற்றி கொள்ள முடியும்.

சுபத்ரா தேசப்பிரிய
(தமிழில்: வீ.ஆர்.வயலட்)

# நெல்லை சேமிக்க முடியாத நிலையில் விவசாயிகள்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல்லினை சேமித்து வைக்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர் என அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது. கடந்த இரண்டாண்டுகளாக யூரியா உரத்தினை பெற்றுக் கொள்வதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போதைய சிறுபோகத்திற்குக் கூட ரூபா.40,000.00 க்கு யூரியா வாங்கி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளோம். இதனை விட நிலப் பண்படுத்தல்களுக்கு நகைகளை அடைவு வைத்தே பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளோம். நெல் அறுவடைக்கு எரிபொருள் நெருக்கடியினால் ரூபா.25,000.00 வரை செலவு ஏற்படுகின்றது. யூரியா இல்லாத காரணத்தினால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அறுவடை செய்யப்படும் நெல் உடனடியாக விற்பனை செய்தால் தான் கடன்களை செலுத்த முடியும். உணவுப் பாதுகாப்பு என்ற பெயரில் வீட்டில் நெல்லினை வைத்துக் கொண்டு கடன்களை செலுத்த முடியாது இருக்க முடியாது. அரசு மருந்துகள், யூரியா போன்றன எதிர்காலத்தில் குறைந்த விலையில் விவசாயிகளுக்குக் கிடைக்கப் பெற்றால்தான் விவசாய முயற்சிகள் பயனுள்ளதாக அமையும். தற்போது கூட எரிபொருள் நெருக்கடியினால் கிளிநொச்சி மாவட்டத்தின் சிறுபோக அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது எனவும் கமக்கார அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.



## வடக்கின் உதயம் Vadakkin Uthayam

# கடல் உணவு விலை அதிகரிப்பு

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவில் கடல் உணவுகளின் விலை அதிகரித்துள்ளது. எரிபொருள் கிடைக்காததனால் பல மீன் பிடிப் படகுகள் கரையில் காணப்படுகின்றன. கடல் உணவுகளின் விலை ரூபா.2,000.00 தாண்டி உள்ளது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் எரிபொருளுக்காக ஆர்ப்பாட்டம் நடாத்திய நிலையில் ரூபா.2,000.00 க்கு எரிபொருள் வழங்கப்பட்டது. அதன் பின்பு எரிபொருள் வழங்கப்படாததன் காரணமாக கடலுக்கு மீன் பிடிப்பதற்கு கடற்றொழிலாளர்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. சில கடற்றொழிலாளர்களினால் மீன் பிடிக்கப்பட்டாலும் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முல்லைத்தீவின் கடல் உணவு கிராமங்களுக்கு வருவதில்லை என்ற குற்றச் சாட்டு காணப்பட்ட நிலையில் தற்போது எரிபொருள் நெருக்கடி காரணமாக முல்லைத்தீவின் கிராமங்களுக்கு கடல் உணவு வருவதில்லை என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை முல்லைத்தீவு நகரத்தில் வாழ்கின்ற மக்கள் கூட கடல் உணவினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். கடற்றொழிலாளர்களுக்கும் எரிபொருளினை முதன்மையாக பெற்றுக் கொடுப்பதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மணல் கடத்தலை தடுக்க முயன்ற பொலிஸார் தாக்குதல்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

மணல் கடத்தலை தடுக்க பொலிஸார் டிப்பரை விரட்டிச் சென்றபோது ஏற்படுத்தப்பட்ட விபத்தில் 7 பேர் படுகாயமடைந்தனர். இதில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று அறிய வருகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் வடமராட்சி நெல்லியடி மாலைசந்திப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

பருத்தித்துறை பொலிஸார், மணல் கடத்திச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை மறித்தனர். ஆனால், அந்த வாகனம் நிற்காத நிலையில் அதனை அவர்கள் விரட்டிச் சென்றனர்.

வேகமாக சென்ற டிப்பர், மாலை சந்தை பிள்ளையார் ஆலயத்தின் சப்பை ரதத் திருவிழாவை முன்னிட்டு இடம்பெற்ற இசைக் கச்சேரியை பார்த்துக்கொண்டு வீதியோரமாக நின்றவர்களை மோதித் தள்ளியது. இதில், 7 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் அனைவரும் உடனடியாக அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.

இந்நிலையில், விபத்தை ஏற்படுத்திய டிப்பர் தப்பிச் சென்றுள்ளது.

மணல் கடத்தல் மற்றும் விபத்து சம்பவங்கள் தொடர்பில் பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# யாழில் வீடு புகுந்து பெட்ரோல் திருட்டு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம்மாவட்டசெயலகத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெட்ரோலை இருவர் களவாடியுள்ளனர். குறித்த வீட்டினுள் அதிகாலை 2.30 மணியளவில் நுழைந்த இருவர் , வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெட்ரோலை திருடிக்கொண்டு தப்பி சென்றுள்ளனர். காலையில் வீட்டார் எழுந்து மோட்டார் சைக்கிளை இயக்கிய போது மோட்டார் சைக்கிளில் இயங்காத நிலையிலையே பெட்ரோல் திருடப்பட்டமைதெரியவந்துள்ளது. அதன் பின்னர் வீட்டில் பொருத்தியிருந்த பாதுகாப்பு கண்காணிப்பு கமராவில் பரிசோதித்த போது , வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இருவர் மோட்டார் சைக்கிளில் பெட்ரோலை திருடிக்கொண்டு சென்றமை தெரியவந்துள்ளது.



இந்நிலையில் தனது வீட்டினுள் புகுந்து பெட்ரோல்திருட்டில் ஈடுபடும்வீடியோ காட்சியினைசமூக வலைத்தளங்களில் வீட்டின் உரிமையாளர் பகிர்ந்துள்ளார்.

# ஒட்டுசுட்டான் பிரதேச விவசாயிகளுக்கு முல்லைத்தீவில் டீசல் வழங்கும் நடவடிக்கை!

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்தியவசிய தேவைகளுக்காக டீசல் வழங்கும் நடவடிக்கை இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. முள்ளியவளை பகுதியில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் முல்லைத்தீவு நகரில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் அத்திய அவசிய தேவைக்கான வாகனங்களுக்கு டீசல் வழங்கப்பட்டு வருகின்றது. தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நெற்செய்கையினை மேற்கொண்ட விவசாயிகளின் அறுவடைக்கான முள்ளியவளையில் உள்ள லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏக்கருக்கு பத்து லீற்றர் டீசல் என பெருமளவான விவசாயிகளுக்கு டீசல் வழங்கப்பட்டுள்ள நிலையில் மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் பேருந்து மற்றும் மீன் ஏற்றுமதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளில் ஈடுபடும் ஊர்திகளுக்கு முல்லைத்தீவு பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் வழங்கப்பட்டு வருகின்றது.



ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் விவசாய செய்கையினை மேற்கொண்டுள்ள விவசாயிகளின் அறுவடைக்கான டீசலை முல்லைத்தீவில் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

முத்தையன்கட்டுக்குளம், 3 ஆம் கண்டம் மன்னாகண்டல், சிவநகர்,கனகரத்தினபுரம், கற்சிலைமடு, புளியங்குளம், மன்னாகண்டல் போன்ற வயல் வெளிகளில் மேற்கொள்ளப்பட்ட 4 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையினை மேற்கொண்ட 400 விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 10 லீற்றர் டீசல் வீதம் அறுவடைக்கான டீசல் வழங்கப்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் கமநல சேவைத்திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

தற்போது அறுவடையினை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு அரசாங்க அதிபரின் பரிந்துரைக்கமைய வழங்கப்பட்டு வருவதுடன் ஏனைய விவசாயிகளுக்கும் தேவையான டீசல் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கிழக்கின் குரல்

# பஸ்தரிப்பிடத்தின் பிரதான வாயிலை மூடி ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**



திருகோணமலை பிரதான பஸ் தரிப்பிடத்தின் வாயிலை மூடி தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று (17) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இப்போராட்டம் காலை முதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெற்றது.டீசலை பெற்றுத்தருமாறு கோரியே இவ்வூழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கை போக்குவரத்து சபையின் திருகோணமலை டிப்போவில் டீசல் வழங்கப்படுவதாகக் கேள்வியுற்ற இவர்கள்,அங்கு சென்றபோது டீசல் வழங்கப்படவில்லை. இதை,எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்நிலையில், திருகோணமலை தலைமையக பொலிஸார் இலங்கை போக்குவரத்து சபையுடன் கலந்துரையாடி 2500 லீட்டர் டீசலை தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு வழங்குவதாக கூறியதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

இருந்தபோதிலும், தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் இப்போராட்டத்தால் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் குறிப்பிடுகின்றனர்.

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை திறப்பு, 75 வது மகாசமாதி தின நிகழ்வுகள் காரைதீவில்

**(காரைதீவு குறூப் நிருபர் )**

சுவாமி விபுலானந்த அடிகளாரின் 75 ஆவது மகாசமாதி தின நிகழ்வும், அடிகளாரின் சிலை திறப்பு விழாவும் நாளை (19) செவ்வாய்க்கிழமை காலை காரைதீவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்,விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் நிறுவப்பட்ட அடிகளாரின் சிலை திறந்து வைக்கப்படும்.


மட்டக்களப்பு, இராமகிருஷ்ணமிஷன், உதவிப் பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ், திருமுன்னிலை அதிதியாக கலந்து கொண்டு அடிகளாரின் சிலையை திறந்து வைக்கிறார்.

அங்கிருந்து ஊர்வலம், சுவாமி விபுலாநந்தர் மணிமண்டபத்தை அடைந்ததும்

பணிமன்றத்தின் தலைவர் வெ. ஜெயநாதன் தலைமையில் 75 ஆவது ஆண்டு மகாசமாதிதின வைபவம் ஆரம்பமாகும்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீஸன் இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும், காரைதீவு பிரதேசசபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ,பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ,கல்முனைவலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், திருக்கோவில் வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் சோ.ஸுரநுதன், சம்மாந்துறை வலய உதவிக்கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கௌரவ ,சிறப்பு அதிதிகளாக கலந்துகொள்வர்.



மேலும்,பாடசாலை அதிபர்கள், நற்பணி மன்ற நிறுவுநர்கள், அறங்காவலர் ஒன்றிய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பல பிரமுகர்களும் இதில் பங்கேற்பர்.

காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை), இராமகிருஷ்ண சங்க ஆண்கள் பாடசாலை, மற்றும் கண்ணகி இந்து வித்தியாலய மாணவர்கள் பங்குபற்றலுடன் சுவாமி விபுலாநந்தரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்வலம் பிரதான வீதி ஊடாக, கண்ணகி அம்மன் ஆலய முச்சந்தியை அடைந்து,சுவாமி விபுலாநந்தரின் திருவுருவச் சிலை திறந்துவைக்கப்படும் நிகழ்வு, இவ்வைபவத்தின் ஆரம்ப நிகழ்வாக இடம்பெறவுள்ளது.

சுவாமி விபுலாநந்தரின் இல்லத்தில் குருதேவருக்கான பூசை வழிபாடுகள் மற்றும் சுவாமிகள் திருவுருவச்சிலைக்கு பூமாலை அணிவித்தல் நிகழ்வுகளைத் தொடர்ந்து,ஞாபகார்த்த மணி மண்டபத்தில் சுவாமி விபுலாநந்தரின் திருவுருவப்படம் திறந்து வைத்தல், தேவாரம், வரவேற்பு நடனம், வரவேற்புரை, ஆசியுரை மற்றும் தலைமை உரைகளும் இடம்பெறவுள்ளன.

# சமூக சேவகி நளீமாவுக்கு இந்தியாவில் கௌரவம்



**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

இலங்கை பெண்கள் உதவி அமைப்பின் தலைவியும் சமூக செயற்பாட்டாளருமான பெண் ஆளுமை நளீமா,இந்தியாவின் ஐக்கிய நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சட்ட உரிமைகள் அமைப்பின் தலைமை அலுவலகத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.சென்னை தியாகராஜ நகர் வடக்கு உஸ்மான் ரோட்டில் அமைந்துள்ள அலுவலகத்தில்,இந்நிகழ்வு இடம்பெற்றது. மேலும், ஐக்கிய மக்கள் பாதுகாப்பு நுகர்வோர் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாகவும் நளீமா நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான அடையாள அட்டையும் அவருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு, ஐக்கிய நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சட்ட உரிமைகள் அமைப்பின் நிறுவனத்தலைவர் லயன் அம்பாசிடர், முனைவர் ந. இராமசந்திரனின் தலைமையில் நடைபெற்றது.

# வறுமையை ஒழிக்கும் திடடத்துக்கு உதவுமாறு சகாத்நிதியம் வேண்டுகோள்

**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுவதால் தேவையுடையோரை தேடிச்சென்று, முடியுமான உதவிகளைச் செய்யுமாறு அக்கரைபற்று சகாத்நிதியம் மற்றும் அக்கரைப்பற்று ஜம்மியத்துல் உலமா அமைப்புக்கள் இணைந்து பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரதேசத்தின்,சகோதர சகோதரிகளின் தேவைகளை அறிந்து அவைகளை உடன் நிறைவேற்ற வழிவகை செய்யும் வகையிலே,இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இப்பணியை செவ்வனே நிறைவேற்ற உலமாக்கள், தனவந்தர்கள், பெரியோர்கள், இளைஞர்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரையும் உதவுமாறும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபோக அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளதால், விவசாயிடமிருந்து குறைந்தது ஒரு மூடை நெல்லையாவது இந்தப்பணிக்கு வழங்குமாறு அமைப்பினர் வேண்டியுள்ளனர்.

அக்கரைப்பற்று பட்டின ஜும்மாப்பள்ளிவாசல் வளாகத்திலுள்ள சகாத்நிதிய அலுவலகத்தில் விரும்பியோர் உதவிகளை ஒப்படைக்க முடியும்.

இது தவிர,அக்கரைப்பற்றின் பிரதான பள்ளிவாசல்களிலும் இவ்வுதவிகளை ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் ஐ.ஓ.சியில் சுமுகமாக எரிபொருள் விநியோகம்

**(நிந்தவூர் குறூப் நிருபர்)**

நிந்தவூர் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த இரண்டு நாட்களாக சுமுகமான முறையில் எரிபொருள் விநியோகம் இடம்பெறுவதால் பொது மக்கள் பெரிதும் நன்மையடைந்து வருவதாக, நிந்தவூர் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் ஏ. அஸ்வத்கான் தெரிவித்தார்.



எரிபொருள் விநியோகிக்கும் நடைமுறையில் மோட்டார்சைக்கிள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் வாகனம், அரச அலுவலகங்கள், பொது அமைப்புக்களுக்கு தனித்தனியான தினங்கள் ஒதுக்கப்பட்டு, குறித்த தினங்களில் அவர்களுக்கான எரிபொருட்கள் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.மேலும், பொது அமைப்புக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் நடைமுறையில், அந்தந்த பிரதேச செயலாளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட அமைப்புகளுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.இதேவேளை, நேற்றைய தினம் (17) குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 6,600 லீட்டர் பெட்ரோல் முச்சக்கர வண்டிகளுக்கு தலா 3,000 ரூபா வீதப்படி விநியோகிக்கப்பட்டதாகவும், அடுத்துவரும் நாட்களில் கார்கள், அரச, தனியார் மற்றும் பொது அமைப்புக்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டு,பின்னர் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 7வது சர்வதேச அல் குர்ஆன் ஓதல் போட்டியில் இலங்கை மாணவி சாதனை

ஏ.எஸ்.எம்.ஜாவித்





ஈரான் இஸ்லாமிய குடியரசினால் நடத்தப்பட்ட 7வது சர்வதேச குர்ஆன் ஓதல் போட்டியில் (இணையதளம் ஊடாக) இலங்கை மாணவி மொஹமட் நுஹ்மான் பாத்திமா ஹசீபா 4ஆம் இடம் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளர்.

இல. 202, வெண்ணவத்தை, வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த இம் மாணவி மார்ச் 2022ல் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் அரசால் நடத்தப்பட்ட மாணவிகளுக்கான 7வது சர்வதேச குர்ஆன் ஓதல் போட்டியிலே மேற்படி சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

மாணவியின் வெற்றியை முன்னிட்டு இலங்கையில் உள்ள ஈரான் தூதரகத்தின் கலாசார நிலையத்தினால் அதன் கவுன்சிலர் கலாநிதி பி. மொஸாமி குதர்சி மாணவிக்கு நினைவுச் சின்னத்தையும், சான்றிதழையும் வழங்கி கௌரவித்துள்ளார்.

செல்வி. ஹசீபா புனித குர்ஆனை முழுமையாக மனனம் செய்த ஒரு ஹாபிழா ஆவார்.

அத்துடன் 2019, 2020 ,2021 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கிராத் ஓதல் போட்டியில் 1வது இடத்தையும் சுவீகரித்து சாதனை படைத்தார்.

மாணவியின் வெற்றியை அறிந்து முஸ்லிம் சமய கலாசார விவகார திணைக்களத்தின் சார்பாக பணிப்பாளர் இப்ராஹிம் அன்சார் சாதனை மாணவியையும் அவரது தந்தையையும் திணைக்களத்திற்கு வரவழைத்து பரிசு வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# நகர்வலம்

இரு குழுக்களிடையே வாக்குவாதம்;

## கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் உயிரிழப்பு

வெலிகம மிரிஸ்ஸவில் சம்பவம்

வெலிகம தினகரன் நிருபர்

இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி பலியானதுடன் மற்றுமொருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிரிஸ்ஸ_ உடுபில பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது விடயமாக மேலும் தெரிய வருவதாவது; சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்களின் வீடுகள் தீயிட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

கத்திக்குத்துக்கு இலக்காகிய இருவரும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் ஒருவர் பலியானதுடன் மற்றையவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

பலியானவர் மிரிஸ்ஸ யடிபில பகுதியைச் சேர்ந்த 27 வயது மதிக்கத்தக்க மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

இது விடயமாக வெலிகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கொழும்பிலுள்ள ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதரகம், கொழும்பு சோமாதேவி பிளேஸ் கிருலப்பனையில் உள்ள வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியது. இந்த நிகழ்வில் ஈரான் தூதரகத்தின் பொருளாதார மற்றும் தூதரக கொன்ஸ்யூலர் கே. சோஹைல், ஈரான் கலாசார பிரிவின் கொன்ஸ்யூலர் டாக்டர். பஹ்மன் மோஸ்ஸாமி, ஈரான் தூதரகத்தின் அரசியல் பிரிவு தலைவர் எஸ். மோஸ்தபா ஹஷேமி மற்றும் மொஜ்தபா பர்கந்தன் ஆகியோர் உலர் உணவுகளை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். படம் : ருஸைக் பாரூக்

## சமாதான நீதவானாக நியமனம்

பேருவளை விசேட நிருபர்



பேருவளை மருதானை அரப் வீதியைச் சேர்ந்த மொஹமட் ஸஹீட் அப்துல் பாக்கீர் அகில இலங்கை சமாதான நீதவானாக அண்மையில் களுத்துறை மேலதிக மாவட்ட நீதவான் சம்பத் கமகே முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சமூக சேவையாளரான இவர், அப்ரார் கல்வி நிலையம், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணி மற்றும் பேருவளை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல்களின் நிர்வாக சபை உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார்.

இவர் பேருவளை பாஸியதுல் நஸ்ரியா, மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவரான இவருக்கான சமாதான நீதவான் விண்ணப்பம் முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரியினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## ரயில் மோதி ஒருவர் பலி



கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் கொழும்பு ரயில் வீதியின் மதுரங்குளி செம்பட்டைப் பகுதியில் (14) இரவு ரயிலுடன் ஒருவர் மோதுண்டு மரணமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து நேற்றிரவு புத்தளம் நோக்கி வந்த பயணிகள் ரயிலுடன் இவர் மோதுண்டு உயிரிழந்து இருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த நபர், நிக்கவெரட்டி ரஸ்நாயக்கபுர பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் எதற்காக மதுரங்குளி பகுதிக்கு வருகை தந்தார், எவ்வாறு ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்தார் என்பது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்நவரின் சடலம் நீதவான் விசாரனையின் பின்னர், பிரதே பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சேப் பவுண்டேசனின் ஊடக செயலமர்வு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் ஊடக செயலமர்வு நாளை (19) செவ்வாய் கிழமை நடைபெறவுள்ளது.

சேஃப் பவுண்டேசன் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த செயலமர்வு அநுராதபுரம் சீ பேங் உணவகத்தில் காலை 08.30 மணியில் இருந்து 04.30 வரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் மாத்திரமே கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# மலைச்சாரல்



கண்டி பன்விலை றக்ஸாவ தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.இதன்போது விக்கிரகங்கள் பன்விலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்படுவதை காணலாம். (புசல்லாவை தினகரன் நிருபர்)

இணைய வசதிகளின்றி சிரமப்படும்

## தோட்டப்புற மாணவர்களின் கல்விக்கு உதவுமாறு கோரிக்கை

இரத்தினபுரி சுழற்சி, பலாங்கொடை தினகரன் நிருபர்கள்

பலாங்கொடை மொலமுரே பிரதேசத்தில் வசிக்கும் மாணவர்கள், இணைய வசதிகளில்லாது கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் பெரும் சிரமங்களை எதிரகொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், இவ்வாறு இணைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள மலைப்பாங்கான இடத்துக்கு இம் மாணவர்கள் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது வசிப்பிடங்களிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை காட்டு வழியே நடந்துதான்,இம்மாணவர்கள் மலைப்பாங்கான இடத்துக்குச் செல்கின்றனர்.

இதனால்,பிள்ளைகளின் பாதுகாப்புக்காக பெற்றோரும் செல்ல நேரிடுகிறது.

நாளாந்தம் தொழிலுக்குச் செல்லும் பெற்றோர், இதனால் வருமானங்களை இழக்க நேரிடுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலைமையால், இப்பிரதேசத்தில் வசிக்கும் சுமார் 200 மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுப்பது கவலையளிக்கிறது.

எனவே, இப்பிரதேச மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத்த இணைய வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு பொறுப்பு வாய்ந்தவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

விண்ணை எட்டுமளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டதாக கூறப்படும் இன்றைய காலகட்டத்தில், இவ்வாறான நிலையிருப்பது குறித்து பலாங்கொடை பிரதேச சபை கவனமெடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்வீழ்ச்சிகளில் நீராடுவதால் மரணங்கள் அதிகரிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பொழுது போக்குக்காக நீராடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து பொது மக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

உல்லாசமாக இளைஞர்கள் நீராட வருவதால் ஆபத்துக்களில் சிக்கி உயிரிழப்புக்கள் ஏற்படுவது அதிகரித்து வருகின்றன. எனவே நீர்வீழ்ச்சிகள், ஆறுகள் மற்றும் குளங்களில் நீராடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

களுகங்கை, வளவைகங்கை மற்றும் இவற்றின் கிளையாறுகள், நீர்வீழ்ச்சிகள் என்பன அடிக்கடி சிறிய மழைக்கும் பெருக்கெடுப்பதாலே, ஆபத்துக்கள் அதிகரித்துள்ளன. போக்குவரத்து நெருக்கடிமிக்க இச்சந்தர்ப்பத்தில் ஆபத்தான விடயங்களில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

# எரிவாயு விநியோகத்தில் குழப்பம்; இரண்டாவது முறையாகவும் ஏமாறியதால் மக்கள் ஆவேசம்

தலவாக்கலை குறூப் நிருபர்



நுவரெலியா எரிவாயு நிலையத்தில் முதல்நாள் எரிவாயு கிடைக்காமல் மறு தவணைக்கு வருமாறு அழைக்கப்பட்டவர்கள் மீண்டும் ஏமாற்றப்பட்டதால் அங்கு கடந்த (16) சனிக்கிழமை அமைதியின்மை ஏற்பட்டது.இ'சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

நுவரெலியா நகர எலிசபெத்ராணி வீதியிலுள்ள லிட்ரோ சமையல் எரிவாயு விற்பனை முகவர் நிலையத்தில் கடந்த (14) வியாழக்கிழமை,எரிவாயு விநியோகிக்கப்பட்டது.இதில், பற்றாக்குறை ஏற்பட்டதால்,பிறிதொரு தினத்தக்கு வருமாறு ஏனையோர் அறிவுறுத்தப்பட்டனர்.இந்நிலையில்,சனிக்கிழமை (16)

எரிவாயு வந்ததால் மீண்டும் விநியோகிக்கப்பட்டன.இதன்போது,ஏற்கனவே ஏமாந்து

திரும்பியோருக்கு வழங்கப்படவில்லை.

ஏற்கனவே வரிசையில் காத்திருந்த மக்களுக்கு விநியோகிக்கப்படாது

என்றும் கிராமசேவகர்களால் வழங்கப்பட்ட கூப்பன்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.இதையடுத்தே,இரண்டு நாட்கள் வரிசையில் நின்றவர்களுக்கும், விற்பனை முகவர்களுக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும்,நுவரெலியா பொலிஸார் தலையிட்டு நிலைமையை கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்தனர். கடந்த வியாழக்கிழமை வரிசையில் காத்திருந்து இறுதியில் ஏமாறிய, 20 நபர்களுக்கும் ஏனையவை கூப்பன் முறையிலும் விநியோகம் செய்யப்படும் என பொலிஸார் அறிவித்தனர. பின்னர் பாதுகாப்புக்கு மத்தியில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

பெருந்தோட்ட, கைத்தொழில் மற்றும் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து பெருந்தோட்ட பகுதி தோட்டத் தொழிலாளர்கள் கண்டி நகரில் நேற்று (17) ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கண்டி நகரில் இடம்பெற்ற, இவ்வார்பாட்டத்தில் பெருமளவான தோட்டத் தொழிலாளர்கள் கலந்துகொண்டுள்ளதைப் படத்தில் காணலாம்.
அக்குறணை குறூப் நிருபர்



## ஆபத்து ஏற்படுவதற்குள் மரங்களை வெட்டுமாறு மக்கள் கோரிக்கை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை மெந்தகந்த ராசகல பகுதியின் பிரதான வீதிகளான பீல்லகும்புர, பெரன்தெனிய பகுதிகளிலுள்ள சிறிய வீதிகள் மற்றும் ஒற்றையடிப்பாதைகளில் காணப்படும் பாரிய மரங்களால், பொதுமக்களும் பயணிகளும் பாரிய ஆபத்துக்களை எதிர்கொண்டுள்ளனர்.இம்மரங்கள் எந்த வேளையிலும் விழுந்துவிடும் நிலையிலுள்ளன.இதனால், இவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் செய்ய வேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் பெய்த கடும்மழை மற்றும் வீசிய கடும்காற்றினால் இவ்வாறு பல மரங்கள் விழுந்து சேதங்களை ஏற்படுத்தின. எனவே,மீண்டும் இவ்வாறான நிலை ஏற்படாதிருக்க முன்னேற்பாடுகள் செய்யப்படுவது அவசியம் என்றும் இவ்வாறான மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் பலாங்கொடை பிரதேச சபையிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.கடந்த காலங்களில் விடுக்கப்பட்ட இவ்வாறான கோரிக்கைகள் கண்டுகொள்ளப்படாததாலே,இந்த அசம்பாவிதங்கள் ஏற்பட்டதாகவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# கோவிலுக்குள் வர்த்தகரிடம் 10 இலட்சம் கொள்ளை!

**யாழ். முனியப்பர் ஆலயத்தில் சம்பவம்**

யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலயத்தில் வைத்து வர்த்தகர் ஒருவரிடம் 10 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில், விவசாய உபகரண உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் ஒருவரிடம், குறித்த உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக, வாழைச்சேனையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தமது மனைவியுடன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.



இரண்டு வர்த்தகர்களுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், 20 இலட்சம் ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்ய குறித்த வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்துக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில், அவர்கள் காங்கேசன்துறை வீதியிலுள்ள கோட்டை முனியப்பர் கோவிலில் வழிபாடுகளில் ஈடுபட்டபோது, 10 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகரான சந்தேக நபரும், அவரின் சகோதரரும் குறித்த பணத்தைக் கொள்ளையிட்டுச் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் தலைமையக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டு, சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்காக, யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**சுமார் 32 கோடி ரூபாவுக்கும் அதிக மருந்து வகை**

# அமெரிக்க நிறுவனத்திடமிருந்து பெருமளவு மருந்துகள் நன்கொடை

இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 32 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட மருந்துகள் மற்றும் மருத்துவ உதவிகளில் முதல் பகுதியை இலங்கைக்கு வழங்கியுள்ளது. அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்கவின் தலையீட்டின் மூலம் 'ஹார்ட் டு ஹார்ட்' என்ற சர்வதேச அமைப்புடன் இணைந்து இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.



இலங்கை மக்களுக்கு சர்வதேச உதவிகள் மற்றும் மருத்துவப் பொருட்கள் மிகவும் அவசியமான நிலையில், *Heart to Heart* என்ற சர்வதேச அமைப்பு காட்டிய அர்ப்பணிப்புக்காக இலங்கை மக்களும் தூதரகமும் அந்நிறுவனத்துக்கு நன்றி தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து வழங்குவதாக நம்புவதாகவும் கூறப்பட்டுள்ளது.

# எரிபொருள் வரிசையில் வைத்தியர் மீது தாக்குதல்

எரிபொருள் வரிசையில் வைத்தியர் ஒருவர் மீதும் மற்றும் சுகாதார ஊழியர் ஒருவர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தெஹியத்தகண்டிய நவமெதகம எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுகாதார ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கி எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையில் அங்கு வந்த குழுவினரால் இந்த தாக்குதலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந் நிலையில், தமக்கு தேவையான எரிபொருள் கிடைக்கவில்லை என குற்றம் சுமத்தி அரச வைத்தியசாலைகள் சிலவற்றின் ஊழியர்கள் நேற்று முன்தினம் சேவையில் இருந்து விலகியிருந்தனர். எவ்வாறாயினும், சில பிரதேசங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு எரிபொருளை பெற்றுக் கொடுக்க பிரதேசவாசிகள் நடவடிக்கை எடுத்திருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

**அநுராதபுரம் விவசாயிகளுக்கு**

# யூரியா உரம் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பம்

***அநுராதபுரம் தினகரன் நிருபர்***

அநுராதபுர மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு யூரியா உரத்தினை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் கமநலசேவை அபிவிருத்தி பிரதி ஆணையாளர் சமிந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு நிவாரண விலையில் வழங்கப்படும் யூரியா உர விநியோகம் சம்பந்தமாக சமிந்த ஏக்கநாயக்கவினை தொடர்பு கொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.சிறு போக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக வேண்டி இந்திய கடனுதவியின் மூலம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள யூரியா உரத் தொகையிலிருந்து முதலாவது கட்டமாக அநுராதபுரம் மாவட்டத்திற்கு 16 ஆம் திகதி கிடைத்த 500 உர மூடைகளினை அநுராதபுரம் தலாவ கமநல சேவை மத்திய நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 43 கமநல சேவைகள் மத்திய நிலையங்கள் காணப்படுகின்றது. அதில் ஹொரவபொத்தான கமநல சேவை மத்திய நிலையம் தவிர்த்த ஏனைய 42 மத்திய நிலைய பிரிவிலுள்ள நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மிக விரைவில் உரத்தினை வழங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.


## விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியை நீடித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**விலைக்கோரல் இல. AHEAD/RA2/ELTAELSE/SJP/FMSC/WORKS/08**

**முகாமைத்துவக் கல்வி மற்றும் வர்த்தக பீடத்திலுள்ள திறந்தவெளி மாணவர் செயற்பாட்டு இடப்பரப்பை அபிவிருத்தி செய்தல்**

2022-06-24ஆம் திகதி தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது.

மேற்படிக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி (கேள்வி இல. **AHEAD/RA2/ELTAELSE/SJP/FMSC/WORKS/08)** நாட்டின் நிலவும் சூழ்நிலை காரணமாக 2022 ஜுலை 26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை 2022-07-22ஆம் திகதி வரை கொள்வனவு செய்யலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.**
**2022-07-14.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஹொரண ஆதார வைத்தியசாலையை 2022/2023ஆம் வருடங்களில் நடாத்திக்கொண்டு செல்வதற்கு தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன

02. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர் 2022-07-18ஆம் திகதி முதல் 2022-08-07ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.45 மணி வரையான காலத்தில் விலைக்கோரல் ஆவணக் கட்டணமாக 500.00 ரூபாவை ஹொரண ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து ஹொரண ஆதார வைத்தியசாலையின் நிறுவனப் பிரிவிலிருந்து விண்ணப்பப் படிவம் மற்றும் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும்போது மீளளிக்கப்படும் 10000.00 ரூபாவை விலைக்கோரல் பிணைக் கட்டணமாக ஹொரண ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சிற்றுண்டிச்சாலையை வழங்குதல் 2022/2023 எனக் குறிப்பிட்டு 2022-08-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் வைத்திய அதிகாரி, ஆதார வைத்தியசாலை, ஹொரண எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அல்லது ஹொரண ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் உள்ளிட்டு கிடைக்கச் செய்யலாம். அன்றைய தினம், அந்நேரத்தின் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
04. விலைக்கோரல் விண்ணப்பங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
05. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியான 2022-08-08ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவரது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
06. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்ட நபர்களின் விண்ணப்பங்களை எந்தவொரு வேளையிலும் நிராகரிப்பதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உண்டு.
07. மேலதிகமாக ஏதாவது தெளிவுபடுத்தல்கள் தேவையாயின் 034-2261261 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இந்த அலுவலகத்தின் நிறுவனப் பிரிவைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய அத்தியட்சகர் / அதிகாரம் வாய்ந்த அலுவலர்**
**ஹொரண ஆதார வைத்தியசாலை.**

### பகிரங்க ஏல விற்பனை

சொ.'ப்ட்லொஜிக் .'பினான்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு, உரிய காலத்தில் மீட்கப்படாத தங்க நகைகள் எமது **இல.85, கொலன்னாவை வீதி, தெமட்டகொடை, கொழும்பு 09,** என்ற இலக்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் **27 ஜுலை 2022 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை** ஏலத்தில் விற்கப்படும்.

**எமது தங்கக் கடன் நிலையங்கள்**

- பொரளை
- ஹெட்டன்
- தெமட்டகொடை
- கண்டி
- காலி
- பதுளை
- கம்பஹா
- மாவனெல்ல
- கிராண்பாஸ்
- சிலாபம்
- கடவத்தை
- குருநாகல
- களுத்துறை
- அனுராதபுரம்
- கொச்சிக்கடை
- சுன்னாகம்
- கொட்டாஞ்சேனை
- தம்புள்ள
- கொட்டாவ
- எம்பிலிபிட்டிய
- மாத்தறை
- யாழ்ப்பாணம்
- நீர்கொழும்பு
- மாத்தளை
- திஸ்ஸமஹாராம
- நுவரெலிய
- இரத்தினபுரி
- பொலன்னறுவை
- வெலிகம
- பம்பலப்பிட்டிய
- வத்தளை

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.

## வட மேல் மாகாண சபை

## அறிவித்தல்

**தகைமை சான்றிதழ்களை விநியோகிக்கும் முகமாக கராஜ்களை அனுமதித்தல் – 2023**

பஸ் மற்றும் லொறி போன்ற மக்கள் சேவைக்கு ஈடுபடுத்தப்படும் வாகனங்களுக்கான தகைமைச் சான்றிதழ்களை விநியோகிக்கும் வேலையை ஒப்படைப்பதற்கு வடமேல் மாகாணத்திற்குள் வியாபார பெயர் பதிவுள்ள தனியார் துறையினர் மற்றும் அரச துறை கராஜ்களில் இருந்து (மத்திய போக்குவரத்து சபை டிப்போ உட்பட) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. அதற்காக விண்ணப்பதாரிகளுக்கு கீழ்க்காணும் தகைமைகள் இருத்தல் வேண்டும்.

i. **தகைமைகள்**

அ. 20அடி நீளம், 2 1/2 அடி அகலம், 4 1/2 அடி ஆழமுள்ள குழி, வாகனங்களைப் பரீட்சிப்பதற்கு அதற்குச் சமமான தகைமைகள் வழங்கும் பரிசீலனை மேடை அல்லது உயர்த்தி.

ஆ. டெப்லி பிரேக் பரிசீலிக்கும் உபகரணம்

இ. பிரதான விளக்குகள் அளவை உபகரணம்

ஈ. வாகனத்தின் அடிப்பாகம், ஸ்டியரிங், சந்திகள், பிரேக் குழாய், கேபிள் போன்ற மற்றும் துடுப்பிடித்த பகுதிகளை பரிசீலிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஸ்குரூ டிரைவர், சுத்தியல் போன்ற இயந்திர கருவிகள்.

உ. மேற்படி தேவைப்பாடுகள் தம்மிடம் இல்லாதிருப்பினும் அவற்றை கொள்வனவு செய்வதற்கு விரும்பும் மற்றும் ஆற்றல் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கும் விண்ணப்பிக்கலாம்.

ii. **ஊழியர் குழாம்**

உறுதிப்படுத்தும் அதிகாரிகளாக கீழே குறிப்பிடப்படும் குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்ட நபர்கள், கராஜ்காரர்களால் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.

அ. மோட்டார் வாகன பொறியியல் பற்றிய 05 வருட அனுபவத்துடன், இயந்திர பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய தேசிய டிப்ளோமா சான்றிதழ் அல்லது கனிஷ்ட தொழில்நுட்ப அதிகாரி சான்றிதழை பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான வேறு தகைமை.

ஆ. மோட்டார் வாகன பொறியியல் பற்றிய வெளிநாட்டில் பயிற்சி பெற்றிருப்பவர்கள் மேற்படி தேவைப்பாட்டிலிருந்து விடுவித்தல் சம்பந்தமாக அவர்களது தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

02. கீழ்க்காணும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. கராஜ் அமைந்துள்ள இடம் பற்றி சரியாகக் குறிப்பிட்டு, பரிசீலனை அதிகாரிகளுக்கு அவ் இடங்களை பார்வையிடுவதற்கு இயலுமானவாறு நகர மத்தியில் இருந்து அடையக்கூடிய பாதையை குறிப்பிடும் குறிப்பு ஒன்றுடன் விண்ணப்பம்.

ஆ. உறுதி செய்யும் அதிகாரிகளின் தகைமை ஆவணங்களின் உறுதி செய்த போட்டோ பிரதிகள்

இ. மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூ. 1,500/- பெறுமதியான காசுப் பற்றுச் சீட்டு (வடமேல் மாகாண பிரதான செயலகத்தின் காசாளரிடம் காசு செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்)

விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையில். "தகைமைச் சான்றிதழுக்கான கராஜ் - 2023" என்று குறிப்பிடுதல் வேண்டும். அவ் விண்ணப்பங்கள் 2022.08.31ம் திகதி அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு இவ் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.

........................................
**பி.பீ.எம். சிரிசேன**
**பிரதம செயலாளர்**
**வடமேல் மாகாணம்**

**முகவரி**
**பிரதம செயலாளர்**
**பிரதம செயலகம்,**
**(வடமேல் மாகாணம்)**
**குருநாகல்.**

## மனுக்களை திறக்கும் கால நீடிப்பு அறிவித்தல்

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

**இலங்கை பொலிஸ்**

01. இலங்கை பொலிஸ் சார்பாக திணைக்கள வழங்கல் குழுவின் (DPC) தலைவரினால் **2022.06.27** ஆம் திகதி பத்திரிகை விளம்பரத்தில் வெளியான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களுக்கான மனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி, மனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி மற்றும் மனுக்களை திறக்கும் திகதி என்பன கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படி நீடிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| இலக்கம் | 2022.06.27 ஆம் திகதி வெளியான பத்திரிக்கை விளம்பரத்தின் படி வழங்கல் இல | 2022.06.27 ஆம் திகதி வெளியான பத்திரிக்கை விளம்பரத்தின் படி மனு ஆவணங்களை வழங்கும் இறுதித்திகதி மற்றும் மனுக்களை திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த திகதி | நீடிப்பிற்கு பின் மனுக்களை வழங்கும் இறுதித்திகதி, மனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி மற்றும் மனுக்களை திறக்கும் திகதி |
|---|---|---|---|
| 01- 08 | LA/S1/181/2022, LA/S1/PMS/23/2022, LA/S1/182/2022, LA/S1/183/2022, LA/S1/184/2022, LA/S1/185/2022, LA/S1/186/2022, LA/S1/187/2022 | 18.07.2022 | 28.07.2022 |
| 10-15 | LA/S1/188/2022, LA/S1/189/2022, LA/S1/CRD/10/2022, LA/S1/PMS/24/2022, LA/S1/PMS/25/2022, LA/S1/COM/15/2022 | 19.07.2022 | 29.07.2022 |
| 09 and 16 | LA/S1/FFHQ/04/2022, LA/S1/COM/16/2022 | 19.07.2022 | 08.08.2022 |

02. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களின் தகவல்களுக்காக **2022.06.27** ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தினை பார்ப்பதன் மூலம் அல்லது **www.police.lk** எனும் இணையத்தளத்திற்கு செல்வதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை அறியத்தருவதுடன், **2022.06.27** ஆம் திகதி பிரசுரமான விளம்பரத்தின் மற்றைய அனைத்து வழங்கல் நிபந்தனைகளிலும் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை.

03. இதற்காக ஆர்வமுள்ள மற்றும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் மற்றும் தொலைபேசி இலக்கங்களின் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**பணிப்பாளர்,**
**வழங்கல் பிரிவு,**
**2ஆம் மாடி,**
**பொலிஸ் தலைமையகம்,**
**கொழும்பு 01.**

| | | |
|---|---|---|
| மனுப்பத்திர பிரிவு | - | **011-2013116/ 3117** |
| உ.பொ.பி/வழங்கல் | - | 011-2324915/ 0718592072 |
| மாதிரி பொருள் பிரிவு | - | 011-2013711/ 0112013124 |
| பெக்ஸ் இலக்கம் | - | 011-2320729 |
| மின்னஞ்சல் | - | dir.supplies@police.lk |
| இணையம் | - | www.police.lk |

**பொலிஸ் மா அதிபர்**

## கேள்விகளுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் (USJP)

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூகக்கல்விப் பீடத்தின் (IIஆம் படிநிலை) சுமங்கள கட்டிடத்தில் வரைபடவியல் ஆய்வுகூடம் உட்பட டிஜிட்டல் வகுப்பறையை (Smart Class Room) நிறுவுதல்**

**கேள்வி இல. USJ/TDP/ /FHSS/SC/2022 STAGE II**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதும், 18.74 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவைக் கொண்ட திட்டமான நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூகக்கல்விப் பீடத்தின் (II படிநிலை) சுமங்கள கட்டத்தில் வரைபடவியல் ஆய்வுகூடம் உட்பட டிஜிட்டல் வகுப்பறையை நிறுவுவதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   இந்த வேலைகளில் நிறப்பூச்சு பூசுதல் மற்றும் அலங்கரித்தல், அலுமினிய வேலைகள், மடிக்கக்கூடிய பகுதிபிரிப்பு, திரைச்சீலைகள் மற்றும் யன்னல் மறைப்புகள், LVT தரைகள், மரத்தாலான தரைகள், சீலிங் முடிவுறுத்தல்கள், மின்சார நிறுவல்கள் என்பன உள்ளடங்குகின்றன. இதன் நிர்மாணக் காலம் 90 நாட்களாகும்.
2. கேள்வி கோரல் தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் செயற்பாட்டிற்கமைய மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்வதற்காக வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். - C6 மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதி தகைமைத் தேவைப்பாடுகள்:
   i. ரூபா 20,000,000.00 பெறுமதியைக் கொண்ட இதனையொத்த ஆகக் குறைந்தது 2 ஒப்பந்தங்களில் அனுபவம் மற்றும் குறைந்தபட்சம் 40,000,000.00 ரூபா பெறுமதியைக் கொண்ட நிர்மாண வேலையை கடந்த ஐந்து வருடங்களுக்குள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   ii. ஏனைய நிர்மாணக் கடப்பாடுகள் மற்றும் பிரத்தியேகமாக எந்தவொரு முற்பணம் தவிர்ந்ததாக ஆகக் குறைந்த திரவ சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதி தொகையானது 12,000,000.00 ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
   iii. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சேர்ப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல். கேள்விதாரர் அவ்வாறு பதிவு செய்யப்பட்டில்லாவிடில் உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) அறவிடுவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதென வழங்கப்பட்ட கடிதம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், மூலதனம் மற்றும் திட்டமிடல் கிளை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் பின்வரும் முகவரியில் 2022 ஜுலை 18ஆம் திகதி முதல் 2022 ஜுலை 26ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் கேள்வி ஆவணங்களை பரீசித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 2022 ஜுலை 18ஆம் திகதி முதல் 2022 ஜுலை 26ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் மீளளிக்கப்படாத ஐயாயிரம் ரூபா (5,000.00 ரூபா) கட்டணத்தை நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்ட முழுமையான கேள்வி கோரல் படிவத் தொகுதியொன்றை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் கிளை செயற்றிட்ட முகாமையாளருக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
7. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களுடன் கடித உறையிலிட்டு 2022 ஜுலை 27ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் துணை வேந்தர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொட எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவுற்ற உடனடுத்து சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்விகள் 77 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
9. சகல கேள்விகளுடனும் ஒரு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து முன்னூற்று முப்பந்தைந்து ரூபா (187,335.00 ரூபா) பெறுமதியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையற்ற கோரிக்கை வங்கி உத்தரவாதம் அல்லது இலங்கை நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்தப் பிணை முறி 2022 ஒக்டோபர் 12ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். பிணை முறியானது நிலையான படிவங்கள் (ஒப்பந்தங்கள்) 2ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தை பயன்படுத்தி துணை வேந்தருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2022 ஜுலை 25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில, நுகேகொட.**

# தெவிநுவர பிரதேச சபை

## தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு ஆலயத்தின் எசல கொண்டாட்டம்

## எசல விற்பனைச் சந்தை - 2022

### தற்காலிக தகரக் கொட்டகைகளை நிர்மாணித்தல் மற்றும் மின்சாரம் வழங்குதல்

## கேள்வி விலைக்கோரல் அறிவித்தல்

தெவிநுவர பிரதேச சபைக்குரித்தான, தெவிநுவர பொது விளையாட்டரங்கில் 2022-08-12ஆம் திகதி முதல் 2022-08-20ஆம் திகதி நடைபெறுவதற்குள்ள எசல விற்பனைச் சந்தையில் தற்காலிக தகரக் கொட்டகைகளை நிர்மாணித்தல் மற்றும் மின்சாரம் வழங்கும் வேலைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக 2022-07-16ஆம் திகதி முதல் 2022-07-29ஆம் திகதி வரை தகைமைகளைக் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. i. பின்வரும் அளவுகளில் சபையினால் வழங்கப்படும் திட்டங்கள் மற்றும் விபரங்குறிப்புகளுக்கு அமைவாக தற்காலிக தகரக் கொட்டகைகளை (கூரை முன்புற நீளமின்றி) 656 அலகுகள் நிர்மாணித்தல்.

| சதுர அடி அளவு | தகரக் கொட்டகைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 06 அடி நீளம் 05 அடி அலகம் 10 அடி உயரம் | 572 |
| 10 அடி நீளம் 06 அடி அலகம் 10 அடி உயரம் | 84 |

ii. தகரக் கொட்டகை ஒன்றுக்கு மின் இணைப்பு வழங்கு மின்சாரம் வழங்குதல், சந்தை இடப்பரப்பிற்கு மின்னொளி வழங்குதல் சபையினால் வழங்கப்படும் கொள்ளளவு மற்றும் அளவுகளைக் கொண்ட மின் குமிழ்கள் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரங்களைப் பயன்படுத்தி மின்சாரம் வழங்குதல் வேண்டும்.

iii. திட்டம், விபரக்குறிப்பு, கேள்வி விண்ணப்பப்படிவங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகளை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம். 2022-07-28ஆம் திகதியின் பின் கேள்வி விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**தெவிநுவர பிரதேச சபை.**
**தொலைபேசி இல. 041-2222571**

**2022-07-14**
**தெவிநுவர பிரதேச சபை அலுவலகத்தில்**

---

afc

## தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 30.04.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 27.07.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஃஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2

### ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:

**722, கோட்டை வீதிஇராஜகிரிய**

**27.07.2022**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
**எலாயன்ஸ் பினான்ஸ்**
கம்பனி பி.எல்.சி
செயாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

---

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 யூலை 20ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 55,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122J218 | LKA18223A204 | LKA36423G213 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 25,000 | 15,000 | 15,000 | 55,000 |

ஏல விற்பனைத் திகதி : 2022 யூலை 20
தீர்ப்பனவுத் திகதி : 2022 யூலை 22
வழங்கப்படும் திகதி : 2022 யூலை 22
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 யூலை 20, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/ பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

**Best way to fulfil your Future Dreams**

*Marriage Proposals*

**in the**

Sunday Observer

---

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

### கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டிரீதியான விலைமனு

## காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**திட்ட இல.: P163742**

## CSIAP திட்டத்திற்கு உட்பட்ட ஊவா மாகாணத்தில் வீட்டுத் தோட்டத் திட்டத்தின் கீழ் 19,500 விதைப் பொதிகள் (14 வகை மரக்கறி விதைகள் மற்றும் சோளம்), வேர் மற்றும் கிழங்கு பயிர்களின் நடவுப் பொருள், பழப் பயிர்களின் நடவுப் பொருள் மற்றும் உரப் பைகளின் பெறுகை

**ஒப்பந்த இலக்கம்: LK-MOA-300441-GO-RFB/DPDO (UP)/Seeds packs (07)/2022/011**

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் செலவுகளை நோக்கியதாக உலக வங்கி – சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியுடைய கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களின் பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பில் பிராந்திய பெறுகைக் குழு (ஊவா மாகாணம்), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**ஒப்பந்தத்தின் பெயர்:**
CSIAP திட்டத்திற்கு உட்பட்ட ஊவா மாகாணத்தில் வீட்டுத் தோட்டத் திட்டத்தின் கீழ் 19,500 விதைப் பொதிகள் (14 வகை மரக்கறி விதைகள் மற்றும் சோளம்), வேர் மற்றும் கிழங்கு பயிர்களின் நடவுப் பொருள், பழப் பயிர்களின் நடவுப் பொருள் மற்றும் உரப் பைகளின் பெறுகை
ஒப்பந்த இலக்கம்: **LK-MOA-300441-GO-RFB/DPDO (UP)/Seeds packs (07)/2022/011**

| கூறு இல. | விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூபா) | விலைமனு பிணையின் தொகை மற்றும் செல்லுபடி |
|---|---|---|---|
| 01 | 14 வகை மரக்கறி விதைப் பொதிகளை வழங்கல் - 19,500 | 5,000/- | இ. ரூபா 135,000.00 2023/01/02 வரை செல்லுபடி |
| 02 | நடவுப் பொருட்களின் வழங்கல் - மேனியாக் மற்றும் இனிப்பு கிழங்குகள் | | இ.ரூபா 35,000.00 2023/01/02 வரை செல்லுபடி |
| 03 | மருத்துவ மூலிகைகளின் வழங்கல் - மஞ்சள் மற்றும் இஞ்சி வேர்த்தண்டு | | இ.ரூபா 28,000.00 2023/01/02 வரை செல்லுபடி |
| 04 | பழச் செடிகள் வழங்கல் - பப்பாளி, கொய்யா, தோடம்பழம், அன்னாசி, முருங்கை | | இ.ரூபா 135,000.00 2023/01/02 வரை செல்லுபடி |
| 05 | இயற்கை உரம் வழங்கல் - உரம் | | இ.ரூபா 145,000.00 2023/01/02 வரை செல்லுபடி |
| 06 | சோள விதைகள் வழங்கல் | | இ.ரூபா 10,000.00 2023/01/02 வரை செல்லுபடி |

3. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. குறித்த விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், வழங்கப்பட்ட அதே விலைமனுவில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூறுகளுக்கு விலைமனுதாரர்கள் விலைக்கேட்பு மேற்கொள்ள அனுமதி இருந்தபோதும், விலைமனுதாரரின் குறிப்பிட்டு வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் ஏனைய திறன் வரம்புகள் அடிப்படையிலேயே தேர்வு மேற்கொள்ளப்படும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் பிரதித் திட்டப் பணிப்பாளர், காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதித் திட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்), இல. 90, ஹப்புத்தலை வீதி, வெல்லவாய (தொ.பே. இல..'. தொலைநகல் இல. 055-2280334) என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2022 ஜூலை 18 ஆம் திகதி தொடக்கம் 2022 ஓகஸ்ட் 05ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை (பி.ப. 3.00) இதே இடத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
6. 2022 ஜூலை 18 ஆம் திகதி தொடக்கம் 2022 ஓகஸ்ட் 05ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15.00 மணி வரை (பி.ப. 3.00) வேலை நாட்களில் ரொக்கப்பணத்தில் மாத்திரம் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி (தொகைக்காக மேலுள்ள அட்டவணையை பார்க்கவும்) மேலுள்ள உருப்படி 5இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு முகவரி அச்சிடப்பட்ட அசல் அஞ்சல் தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து தகுதியுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும்.
7. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்காக தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும், வெற்றிகரமான விலைமனுதாரர் செல்லுபடியான வர்த்தகப் பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.
8. விலைமனுவுடன் சேர்த்து பரிந்துரைக்கப்பட்ட வடிவம் மற்றும்/ அல்லது விதைகளுக்கான சான்றிதழ்/ ஒருவேளை நடவுப் பொருள் தொடர்பான உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அது இல்லாவிட்டால் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதி நிராகரிக்கப்படும்.
9. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேலுள்ள உருப்படி 5இல் குறிப்பிடப்பட்ட இடத்தில் 2022 ஜூலை 26ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் இதில் பங்கேற்பதற்கு முன் விலைமனு ஆவணத்துடன் குறிப்பாக விபரக்குறிப்பு, ITB மற்றும் ஒப்பந்தத் தரவுகள் பற்றி நன்கு அவதானம் செலுத்தும்படி கோரப்படுகின்றனர்.
10. விலைமனுக்களானது மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனு ஆவணத்தில் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறான செல்லுபடியான விலைமனு பிணை ஒன்று இல்லாத எந்த ஒரு விலைமனுவும் பதிலளிக்காததாக கருத்தில் கொள்ளப்படுவதோடு எந்த விசாரணையும் இன்றி நிராகரிக்கப்படும்.
11. விலைமனுக்கள் அசல் மற்றும் நகல் என சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் ஆகிய வெவ்வேறு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் இடுதல் வேண்டும் என்பதோடு அவை முறையே "அசல்" மற்றும் "நகல்" என குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றைக் கடித உறையில் இடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பொருட்கள் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை எழுத வேண்டும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஓகஸ்ட் 08ஆம் திகதி 14.00 மணிக்கு (பி.ப. 2.00) முன்னர் கிடைப்பதற்கு தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (ஊவா மாகாணம்), இல. 90, ஹப்புத்தலை வீதி, வெல்லவாய என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும்.
13. விலைமனுக்கள் 2022 ஓகஸ்ட் 08ஆம் திகதி 14.00 மணிக்கு (பி.ப. 2.00) மூடப்படுவதோடு அதன் பின் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் அவை உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (ஊவா மாகாணம்)**
**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதித் திட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்),**
**இல. 90, ஹப்புத்தலை வீதி,**
**வெல்லவாய.**

திகதி – 2022.07.14

---

# கேள்விக்கான அழைப்பு !

## வட மேல் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

### ஆரம்ப சுகாதார சேவை அமைப்பை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மருத்துவ உபகரணங்களை வழங்குதல், ஸ்தாபித்தல் 2022ஆம் ஆண்டு

மருத்துவ உபகரணங்களை வழங்குதல், ஸ்தாபித்தல் மற்றும் பராமரிப்பதற்காக 2022 ஜுலை 15ம் திகதி மு.ப. 9.00 முதல் 2022 ஓகஸ்ட் 09ம் திகதி மு.ப. 10.00 வரை கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

02. குருநாகல், நீர்கொழும்பு வீதி, வடமேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் காசாளருக்கு 2022 ஜுலை 15ம் திகதி முதல் 2022 ஓகஸ்ட் 08ம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் கேள்விக் கட்டணத்தை செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை அரச வேலை செய்யும் மேற்படி நாட்கள் மற்றும் நேரத்திற்குள் இலவசமாக பரீட்சிக்கலாம்.

| கோவை விபரம் | மருத்துவ உபகரண விபரம் | அளவு | கேள்விப் பிணை (ரூ) | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| NWP/PDHS/FN08/ME/02/2022/1 | Grossing Station | 1 | 60,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/2 | Vacuum Tissue Processor | 2 | 120,000.00 | 3,500.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/3 | Tissue Embedding System | 1 | 2,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/4 | Rotary Microtome | 2 | 1,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/5 | Slide Warmer | 1 | 4,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/6 | Cyto Centrifuge | 1 | 20,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/7 | Tissue Floating Bath | 1 | 1,500.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/8 | Blood Gas Analyzer | 1 | 6,500.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/9 | Infusion pump | 6 | 9,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/10 | Syringe pump | 5 | 10,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/11 | CTG Machine | 2 | 18,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/12 | C-Arm System | 1 | 180,000.00 | 3,500.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/13 | DVT Machine | 4 | 16,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/14 | Suction Apparatus | 30 | 90,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/15 | Ophthalmoscope | 3 | 1,800.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/16 | Table TopAutoclave | 12 | 84,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/17 | Hand -Held Doppler Detector | 5 | 32,500.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/18 | Spot lamp/Examination Lamp | 30 | 120,000.00 | 3,500.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/19 | Mini Autoclave -Vertical Type | 9 | 18,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/20 | Dental Chair Unit | 2 | 16,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME/02/2022/21 | Lithotomy Bed ( For family Planning Clinics) | 20 | 40,000.00 | 1,000.00 |

03. கேள்வி ஆவணங்களை பதிவுத் தபாலில் அல்லது கூரியர் சேவை மூலம் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் உங்களால் விண்ணப்பிக்கும் உருப்படிகள் உட்படுத்தப்பட்ட வேண்டுதல் கடிதத்துடன் கூரியர் சேவையின் கீழ் கேள்வி ஆவணங்களை கோருவதாயின் மேற்படி ஒரு கேள்வி ஆவண பொதிக்காக ரூ. 500 மேலதிக கட்டணம் ஒன்று மற்றும் மேற்படி மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தையும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளரின் பெயரில் மக்கள் வங்கியின் கணக்கு இலக்கம் 012100100415987 என்ற கணக்கிற்கு வரவு வைத்து அப்பற்றுச்சீட்டை (037-2225583/ ca@healthdept.nw.gov.lk) பெக்ஸ் இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "supply of medical Equipment 2022" மற்றும் கோவை விபரங்களை குறிப்பிட்டு 2022 ஓகஸ்ட் 09ம் திகதி மு.ப. 10.00 இற்கு முன் பிரதம கணக்காளர், வடமேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, நீர்கொழும்பு வீதி, புவக்கஸ்சந்தி, குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்படி முகவரியில் பிரதம கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

05. 2022 ஓகஸ்ட் 09ம் திகதி மு.ப. 10.15 இற்கு வடமேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

06. இக் கேள்வி கோரல் பற்றிய மேலதிக விபரங்களை தெளிவு படுத்துவதற்காக 037-2223231, 037-2223479, 037-7393390 என்ற தொ.பே. இலக்கங்களை அழைத்து வடமேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதம கணக்காளரிடம் விசாரிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகதார சேவைத் திணைக்களம்,**
**வடமேல் மாகாணம், குருநாகல்.**

---

BE BETTER INFORMED!

News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

AVAILABLE AT




Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE

# முன்மொழிவு கோரல்

## தம்புள்ள மாநகர சபை

## தம்புள்ள

01. தம்புள்ள மாநகர சபையின் சார்பில், தம்புள்ள மாநகர சபையின் பெறுகைக் குழுவின் சார்பில் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் பின்வரும் செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்காக உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்படுகின்றன. முதலீட்டாளர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

| அம்சம் | செயற்றிட்டத்தின் பெயர் |
|---|---|
| 01. | திகம்பதஹ ஒன்றிணைக்கப்பட்ட குப்பை முகாமைத்துவ நிலைய இடப்பரப்பினுள் உள்நாட்டு / வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு பார்வையாளர் கூடமொன்றை மற்றும் அது சார்ந்த வசதிகள் வழங்கும் இடம்மொன்றை நடாத்திச் செல்லல் |
| 02. | தம்புள்ள மாநகர சபைக்குரித்தான கண்டமல வீதியில் அமைந்துள்ள காணியில் களஞ்சியசாலை கட்டிடத்தொகுதியொன்றை நிர்மாணித்து பராமரித்துக்கொண்டு செல்லல் |
| 03. | தம்புள்ள மாநகர சபைக்குரித்தான இனங்காணப்பட்ட கட்டிடங்களின் கூரைகளில் சூரிய சக்தி முறைமையை (Solar Power System) நிறுவி பராமரித்துக்கொண்டு செல்லல் |

02. முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பது தொடர்பிலான முன்னோடிக் கூட்டமொன்று 2022-08-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சபை அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் முன்மொழிவுகளைக் கோருதல் தொடர்பிலான மேலதிக விபரங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக சகல ஆர்வமுள்ள முதலீட்டாளர்களும் இதில் கலந்துகொள்ள அனுமதி உண்டு.
03. முன்மொழிவுகளை தனிப்பட்ட ரீதியில் ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு 2022-08-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.
04. நகல் பிரதிகளுடன் முன்மொழிவுகளைப் பூர்த்தி செய்து ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என வெவ்வேறான இரு (02) உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த செயற்றித்தின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
05. தம்புள்ள மாநகர சபையினால் நியமிக்கப்படும் குழுவொன்றால் முன்மொழிவுகள் பரிசீலித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் குறும் பட்டியலிடுதல் மேற்கொள்ளப்படும்.
06. இந்த முன்மொழிவு கோரல் தொடர்பில் தம்புள்ள மாநகர சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
07. ஆர்வமுள்ள முதலீட்டாளர்களுக்கு மேலதிக தகவல்கள் தேவையாயின் dambullamunicipal@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது 066-2284539 / 066-2284571 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தம்புள்ள மாநகர சபை, தம்புள்ள.**
2022-07-18.

## தெவிநுவர பிரதேச சபை

## தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு ஆலயத்தின் எசல கொண்டாட்டம்

# எசல விற்பனைச் சந்தை - 2022

### விளம்பரச் சேவையை நடாத்திச் செல்லும் உரிமையை குத்தகைக்கு வழங்குதல் கேள்வி விலைக்கோரல் அறிவித்தல்

தெவிநுவர பிரதேச சபைக்குரித்தான, தெவிநுவர பொது விளையாட்டரங்கில் 2022-08-12ஆம் திகதி முதல் 2022-08-20ஆம் திகதி நடைபெறுவதற்குள்ள எசல விற்பனைச் சந்தை விளம்பரச் சேவையை நடாத்திச் செல்லும் உரிமையை குத்தகைக்கு வழங்குவதற்கு 2022-07-16ஆம் திகதி முதல் 2022-07-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை தகைமைகளைக் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்பப் படிவங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகளை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம். 2022-07-28ஆம் திகதியின் பின் கேள்வி விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**தெவிநுவர பிரதேச சபை.** **2022-07-14**
**தொலைபேசி இல. 041-2222571** **தெவிநுவர பிரதேச சபை அலுவலகத்தில்**

## பகிரங்க அறிவித்தல்

**அலுமெக்ஸ் பி.எல்.சி. (PV 539 PQ), அல்கோ இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் (PV 72405) ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு**

**அலுமெக்ஸ் பி.எல்.சி.** (கம்பனி இல. PV 539 PQ), **அல்கோ இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்)** லிமிட்டட் **(PV 72405)** ஆகிய நிறுவனங்கள் 2007இன் 07ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் (''சட்டம்'') 242ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பது மேற்படிச் சட்டத்தின் 242 (3) (b) பிரிவுக்கு அமைவாக **இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் **அலுமெக்ஸ் பி.எல்.சி.** என்பதாகும். ஒருங்கிணைப்பானது கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒருங்கிணைப்புச் சான்றிதழ் வெளியிடப்படும் திகதியில் நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகிய **அலுமெக்ஸ் பி.எல்.சி.யின்** பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சப்புகஸ்கந்த, மாகோல என்னும் முகவரியில் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களின் எந்தவொரு பங்குதாரரும் அல்லது கடன் வழங்குநரும், அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்று கடப்பாடு கொண்டுள்ள எவரேனுமொருவரும் ஒருங்கிணைப்புப் பிரேரணையின் பிரதிகளை வழமையான வியாபார நேரங்களில் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்ற முகவரியில் பார்வையிடலாம்.

400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2022 ஜூலை 18

**அலுமெக்ஸ் பி.எல்.சி,**
**அல்கோ இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
**ஆகியவற்றின் சபைகளின் கட்டளைப்படி,**
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்

சிறு விளம்பரம்



வேலைவாய்ப்பு
320



வெற்றிடங்கள்
ஹோட்டல்கள், பேக்கரிகள்
பேக்கரிக்கு மாலுப்பாண் க றி செய்ய ஆள் தேவை. சம்பளம் 60, 000/=, சாப்பாட்டிற்கு 12,000/ = கொடுக்க ப்ப டும். வயது 25/ 40 வ ரை . தங்குமி டம் உண்டு. தொடர்பு 07 22151125.
041717

## இலங்கை துறைமுக அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/07/PT/6321(EL) | Spare Parts for the Stinis Spreaders at ECT | 30,000.00 | 1,000.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6329(MP) | 08 Nos. Mobile Crane Tubeless Tyres 445/95 R25 | 75,000.00 | 1,000.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6338(MP) | Spares for Caterpillar C -15 Engines of ZPMC 41T RTGC at JCT | 30,000.00 | 1,000.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6340(MP) | Engine Spares for Terberg Terminal Tractors | 18,000.00 | 1,000.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6336(MP) | Spares for UD Nissan Engine Fitted with UD Nissan Prime Movers | 180,000.00 | 3,500.00 | 16-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/07/PT/6339(MP) | Spares for Caterpillar C – 15 Engines of ZPMC 41T RTGC at JCT | 18,000.00 | 1,000.00 | 18-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6335(MP) | Spares for Konecranes TFC 45HC 45 Ton Reach Stacker – 05 | 95,000.00 | 1,000.00 | 18-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6346(MP) | Spare parts for the UD Nissan Prime Movers | 45,000.00 | 1,000.00 | 18-08-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6342(MP) | Injector Assemblies for Cummins NTA 855 Engines | 36,000.00 | 1,000.00 | 18-08-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/04/015 | SUPPLY MS I BEAMS | 72,000.00 | 1,000.00 | 28-07-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஜூலை 15ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல : 2381652, 2470443**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

### கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டிரீதியான விலைமனு

## காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**திட்ட இல.: P163742**

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் செலவுகளை நோக்கியதாக உலக வங்கி – சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (IDA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியுடைய கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணப் பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பில் பிராந்திய பெறுகைக் குழு (ஊவா மாகாணம்), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | CIDA தரம் மற்றும் சிறப்புத்தன்மையின் துறை | மீளளிக்கப் படாத கட்டணம் (இ.ரூபா) | விலைமனு பிணை பெறுமதி (இ.ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஒப்பந்த இல. LK-MOA-293145-CW-RFB/UP/ DPDO/ Rehb.T/ (3)/2022/03 | உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட CSIAP திட்டத்தின் கீழ் ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், DSD புத்தல, ASC புத்தல, பரபோய நீர்வீழ்ச்சி உள்ள கொனகனர கி.சே. பிரிவில் கும்புகஸ் வெவ மற்றும் கூன்கெட்டிய கி.சே. பிரிவில் உதார வெவ, திம்பிரிகஸ் அர மகா வெவ, திம்பிரிகஸ் அர பொடி வெவவின் மறுசீரமைப்பு | C4 மற்றும் அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் | 5000.00 | 615,000.00 2023 ஜனவரி 02 |
| 02 | ஒப்பந்த இல. LK-MOA-265599-CW-RFB/UP/ DPDO/Rehb. Anct/ (7)/2022/04 | உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) கீழ் ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவு, ஹந்தபன்கல ASC பகுதியில் உள்ள மஹார நீர்வீழ்ச்சியின் 02ஆம் இலக்க அணைக்கட்டின் மறுசீரமைப்பு | C6 மற்றும் அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் | 5000.00 | 260,000.00 2023 ஜனவரி 02 |
| 03 | ஒப்பந்த இல. LK-MOA-293148-CW-RFB/UP/ DPDO/Rehb. T/ (23)/2022/07 | உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) கீழ் ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவு, தெலுள்ள ASC, தெலுள்ள நீர்வீழ்ச்சி உள்ள தெலுள்ள ஜனபதய கி.சே. பிரிவில் வலெஸ்கமவின் மறுசீரமைப்பு | C6 மற்றும் அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் | 5000.00 | 215,000.00 2023 ஜனவரி 02 |
| 04 | ஒப்பந்த இல. LK-MOA-265605-CW-RFB/UP/ DPDO/Rehb. Anct/ (38)/2022/09 | உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட CSIAP திட்டத்தின் கீழ் ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டத்தில் வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவு, மஹா – ஆர நீர்வீழ்ச்சி, ஹதபன்கல ASC பகுதியில் உள்ள 04ஆம் இலக்க அணைக்கட்டின் மறுசீரமைப்பு | C4 மற்றும் அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்கள் | 5000.00 | 600,000.00 2023 ஜனவரி 02 |

3. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் பிரதித் திட்டப் பணிப்பாளர், காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதித் திட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்), இல. 90, ஹப்புத்தலை வீதி, வெல்லவாய (தொ.பே. இல./ தொலைநகல் இல. 055-2280334) என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை (பி.ப. 3.00) இதே இடத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்காக தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் வெற்றிகரமான விலைமனுதாரர் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் கால்வாய்களின் சிறப்புத்தன்மையின் கீழ் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) செல்லுபடியான பதிவுத் தரத்தை பெற்றிருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகேட்பு மேற்கொள்ள விலைமனுதாரர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றபோதும், இலங்கை அரசாங்கத்திற்கு உச்ச நிதி அனுகூலத்தை கருத்தில்கொண்டு ஒப்பந்ததாரர்களின் நிதி மற்றும் ஏனைய திறன் வரம்புகளுக்கு அமையவே தேர்வு மேற்கொள்ளப்படும்.
6. 2022 ஜூலை 18 ஆம் திகதி தொடக்கம் 2022 ஓகஸ்ட் 05ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15.00 மணி வரை (பி.ப. 3.00) வேலை நாட்களில் ரொக்கப்பணத்தில் மாத்திரம் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி (தொகைக்காக மேலுள்ள அட்டவணையை பார்க்கவும்) மேலுள்ள உருப்படி 4இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பிரதித் திட்டப் பணிப்பாளருக்கு முகவரி அச்சிடப்பட்ட அசல் அஞ்சல் தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து தகுதியுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் தளப் பயணம் மேலுள்ள உருப்படி 4இல் குறிப்பிடப்பட்ட இடத்தில் 2022 ஜூலை 26 ஆம் திகதி 11.00 மணிக்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் தொடர்புடைய அதிகாரிகளின் உதவியுடன் தளங்களை பரீட்சிப்பதற்கு கோரப்படுகின்றனர்.
8. விலைமனுக்களானது மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனு ஆவணத்தில் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறான செல்லுபடியான விலைமனு பிணை ஒன்று இல்லாத எந்த ஒரு விலைமனுவும் பதிலளிக்காததாக கருத்தில் கொள்ளப்படுவதோடு எந்த விசாரணையும் இன்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனுக்கள் அசல் மற்றும் நகல் என சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் ஆகிய வெவ்வேறு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் இடுதல் வேண்டும் என்பதோடு அவை முறையே "அசல்" மற்றும் "நகல்" என குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளும் முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றைக் கடித உறையில் இடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பணி விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை எழுத வேண்டும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஓகஸ்ட் 08ஆம் திகதி 14.00 மணிக்கு (பி.ப. 2.00) முன்னர் கிடைப்பதற்கு தலைவர், பிராந்திய பெறுகைக் குழு (ஊவா மாகாணம்), இல. 90, ஹப்புத்தலை வீதி, வெல்லவாய என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும்.
11. விலைமனுக்களை ஏற்பது 2022 ஓகஸ்ட் 08ஆம் திகதி 14.00 மணிக்கு (பி.ப. 2.00) நிறைவடையும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் அவை உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (ஊவா மாகாணம்)**
**காலநிலை ஸ்மார்ட் நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதித் திட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்),**
**இல. 90, ஹப்புத்தலை வீதி, வெல்லவாய.**

திகதி – 2022.07.14

# இலங்கை அணி 40 ஓட்டங்களால் முன்னிலை

பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி 40 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

காலியில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணிக்கு அதன் தலைவர் பாபர் அசாம் கைகொடுத்தார்.

24 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை இழந்த நிலையில் நேற்று தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாக். அணி தொடர்ந்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இரண்டாம் நாளின் மூன்றாவது பந்திலேயே அசார் அலி 3 ஓட்டங்களுடன் வெளியேற தொடர்ந்து வந்த ரிஸ்வான் 19 ஓட்டங்களுக்கும் அகா சல்மான் மற்றும் முஹமது நவாஸ் தலா 5 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் ஷஹின் ஷாஹ் அப்ரிடி டக் அவுட் ஆக பாக். அணி 150 ஓட்டங்களை எட்டுவது கூட கடினமாக இருந்தது.



ஆனால் ஒரு ஓட்டத்துடன் நேற்றைய நாளை ஆரம்பித்த பாபர் அசாம் பின் வரிசை விக்கெட்டுகளை வைத்துக் கொண்டு ஒரு முனையில் சிறப்பாக ஆடி பாக். அணி முதல் இன்னிங்ஸில் பெரும் பின்னடைவை சந்திப்பதை தவிர்த்துக் கொண்டார்.

குறிப்பாக பாக் அணி 148 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்திருந்த வேளை, நசீம் ஷாஹவுடன் இணைந்து கடைசி விக்கெட்டுக்காக 70 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார்.

இதன்போது பாபர் அஸாம் தனது 7ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். 244 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 11 பௌண்டரி 2 சிக்ஸர்களுடன் 119 ஓட்டங்களை பெற்று கடைசி விக்கெட்டாக ஆட்டமிழந்தார்.

இதன்மூலம் பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸுக்காக 90.5 ஓவர்களில் 218 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன்போது இலங்கை சார்பில் பிரபாத் ஜயசூரிய 5 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு மஹீஷ் தீக்ஷன மற்றும் ரமேஷ் மெண்டிஸ் தலா 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர்.

இலங்கை அணி தனது முதல் இன்னிஸில் 222 ஓட்டங்களை பெற்ற நிலையில் 4 ஓட்டங்களால் முன்னிலை பெற்றே நேற்று தேனீர் இடைவேளைக்குப் பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. இதன்படி நேற்று ஆட்ட நேர முடிவின்போது இலங்கை அணி ஒரு விக்கெட்டை இழந்து 36 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஒஷத பெர்னாண்டோ 17 ஓட்டங்களுடனும் கசுன் ராஜித்த 03 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும்.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ...................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ...................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ...................
வாக்களித்தவர் பெயர் : ...................
முகவரி : ...................
மொபைல் இல. : ...................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000


44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 23-07-2022 இல. 17




## உலக மெய்வல்லுனர் போட்டி: நிலானி ரத்நாயக வெளியேற்றம்



ஐக்கிய அமெரிக்காவின் ஒரிகொனில் நடைபெற்றுவரும் உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் பெண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய இலங்கையின் நிலானி ரத்நாயக, 13ஆவது இடத்தைப் பிடித்து முதல் சுற்றுடன் வெளியேறினார்.

கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற முதலாவது தகுதிச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய நிலானி ரத்நாயக, போட்டித் தூரத்தை 9 நிமிடங்கள் 54.10 விநாடிகளில் நிறைவு செய்து 13ஆவது இடத்தைப் பெற்றார்.

இந்தப் போட்டியில் நோரா ஜெருடோ (கஸகஸ்தான்) 9.01.54 நிமிடம், வெருகுவா கெடசிங் (எத்தியோப்பியா) 9.11.25 நிமிடம், மர்வா பௌசயானி (துனீஷியா), 9.12.14 நிமிடம், ஆகியோர் முதல் 3 இடங்களைப் பிடித்து அரை இறுதிக்குத் தகுதி பெற்றனர்.

இதேவேளை, 3 சுற்றுக்களைக் கொண்டதாக நடைபெற்ற பெண்களுக்கான 3000 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் 42 வீராங்கனைகள் பங்குபற்றியிருந்ததுடன், ஒட்டுமொத்த நிலையில் நிலானி ரத்நாயக 39ஆவது இடத்தைப் பெற்றார்.

## 100 மீ. ஓட்டப் போட்டியில் அமெரிக்கா உலக சம்பியன்



உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டியின் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியின் முதல் மூன்று இடங்களையும் அமெரிக்கா கைப்பற்றியது.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியின் நேற்று நடந்த 100 மீற்றரில் பிரெட் கெர்லி 9.86 விநாடிகளில் போட்டியை முடித்து முதலிடத்தை பெற்றார். இவர் கடந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்றிருந்தார்.

இதில் அமெரிக்காவின் மர்வின் பிராசி வெள்ளிப் பதக்கத்தையும் ட்ரயோன் பிரோமெல் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர். இருவரும் 9.88 விநாடிகளில் போட்டியை முடித்தனர்.

உலக சம்பியன்சிப் போட்டியில் 1991 இல் அமெரிக்கா 100 மீற்றரில் மூன்று பதக்கங்களையும் வென்றபின் ஒரே நாடு இவ்வாறு மூன்று பதக்கங்களையும் வெல்வது இது முதல்முறையாகும்.

வேகமான காலத்துடன் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய ஜமைக்காவின் ஒப்லிக் செவில்லே நான்காவது இடத்தையே பிடித்ததோடு நடப்புச் சம்பியனான அமெரிக்காவின் கிறிஸ்டியன் கொலமன் ஆறாவது இடத்தையே பிடித்தார்.


## 2ஆவது டெஸ்ட் காலிக்கு மாற்றம்

பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை–பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் இந்தப்போட்டித்தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் என ஏற்கனவே வெளியிடப்பட்ட போட்டி அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் கொழும்பில் ஏற்பட்டுவரும் அரசியல் குழப்பம் காரணமாக இரண்டாவது டெஸ்ட் போட்டியையும் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இந்தத் தீர்மானத்தை இரண்டு கிரிக்கெட் சபைகளும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

அதன்படி, இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும்.

## டி20 உலகக் கிண்ணப் போட்டி: சிம்பாப்வே, நெதர்லாந்து தகுதி



புலவாயோவில் நடைபெற்ற தகுதிகாண் தொடர் ஒன்றில் வெற்றி பெற்ற சிம்பாப்வே மற்றும் நெதர்லாந்து இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன.

கடந்த வெள்ளிக்கிமை நடைபெற்ற போட்டிகளில் சிம்பாப்வே 27 ஓட்டங்களால் பப்புவா நியு கினியை வீழ்த்தியதோடு அமெரிக்காவுக்கு எதிராக நெதர்லாந்து ஏழு விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இதன்படி அவுஸ்திரேலியாவில் வரும் ஒக்டோபரில் நடைபெறும் டி20 உலகக் கிண்ணத்தின் முதல் சுற்றில் இந்த இரு அணிகளும் இடம்பிடித்துள்ளன.

முதல் சுற்றில் ஏ மற்றும் பி குழுக்களாக இலங்கை உட்பட மொத்தம் எட்டு அணிகள் பங்கேற்பதோடு இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறும்.

இந்த ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின் இறுதி ஆட்டம் வரும் நவம்பர் 13 ஆம் திகதி மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும்.

## 3ஆவது போட்டியிலும் பங்களாதேஷ் வெற்றி



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய பங்களாதேஷ் அணி 3 போட்டிகளைக் கொண்ட தொடரை 3–0 என முழுமையாகக் கைப்பற்றியது. புரவிடன்ஸில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட மேற்கிந்திய தீவுகள் அணி 48.4 ஓவர்களில் 178 ஓட்டங்களுக்கு சுருண்டது. அணித்தலைவர் நிகலஸ் பூரன் 73 ஓட்டங்களை பெற்றார்.

சிறப்பாக பந்துவீசிய தைஜுல் இஸ்லாம் 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். பதிலெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 48.3 ஓவர்களில் ஆறு விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. லிட்டோன் தாஸ் 50 ஓட்டங்களை பெற்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.